வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 14.08.2025 வியாழக்கிழமை இதழ் : 226 பக்கங்கள் : 12

## கடந்த காலத்தை மாற்றியமைக்கும் வாய்ப்பை இலங்கை தவறவிடக்கூடாது

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வலியுறுத்து

ஜெனிவா, ஓகஸ்ட் 14

**வலுவாக வேரூன்றியுள்ள தண்டனையின்மை நிலையிலிருந்து விடுபடுவதற்கும் மாற்றமளிக்கும் சீர்திருத்தங்களை செயல்படுத்தவும் கடந்த காலங்களில் நிகழ்த்தப்பட்ட மிகமோசமான மனித உரிமைகள் மீறல், சர்வதேச குற்றங்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் குறித்து நீண்டகாலமாக நிலுவையிலுள்ள நீதி - பொறுப்புக்கூறலை வழங்குவதற்குமான வரலாற்று வாய்ப்பை இலங்கை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று ஐ. நா. மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.**



ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் ஆணையாளர் அண்மையில் இலங்கைக்கு வருகை தந்தார். இதன்போது, பல இடங்களுக்கும் நேரில் சென்று பல தரப்பட்டவர்களை சந்தித்தார். இதைத் தொடர்ந்து குறுகிய காலத்தில் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் பாதுகாப்புத் துறையில் முழுமையான கட்டமைப்பு மாற்றங்கள், நாட்டின் சர்வதேச மனித உரிமைக் கடைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் அரசமைப்பு, சட்ட மற்றும் நிறுவன மாற்றங்களுக்கான அழைப்பையும் அவர் விடுத்துள்ளார்.

மேலும், "பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குதல், சட்டத்தின் ஆட்சியை

11

## சிலர் உயிருடன் குழியில் புதைக்கப்பட்டிருக்கலாம்!

### சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 14

"அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் சிலர் உயிருடன் புதைக்கப்பட்டிருக்கலாம்", என்று நினைக்கிறோம் என்று சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் அரச ஊடகமான 'டாய்ச் வெல' வுக்கு (Deutsche Welle) அளித்துள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

11

## அரியாலை புதைகுழி வழக்கு: இன்று நீதிமன்றில் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக. 14

அரியாலை (செம்மணி அருகே) சித்துப்பாத்தி புதைகுழி தொடர்பான வழக்கு இன்று வியாழக்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

புதைகுழியின் மண் மாதிரிகள் தொடர்பான அறிக்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் நீதிமன்றத்தால் கோரப்பட்டிருந்த நிலையில் இந்த வழக்கு

11

## திங்களன்று ஹர்த்தாலுக்கு மக்கள் ஆதரவு தரவேண்டும்

### தமிழ் அரசு தலைமை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 14

"மக்கள் குடியிருப்பு பகுதிகளில் இருந்து இராணுவம் விலக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு, கிழக்கு தழுவிய ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளோம். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும்" என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் கோரியுள்ளார்.

நேற்றைய தினம் தனது பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக்

11

## பொறுப்புக்கூறும் விடயத்தில் அரசு மிகக் குறைந்த முயற்சி

### இலங்கை மனித உரிமைகள் மீறல் குறித்து அமெரிக்க இராஜாங்க திணைக்களம் சாடல்

கொழும்பு, ஒக. 14

இலங்கையில் மனித உரிமைகள் மீறலுக்கு பொறுப்பான அதிகாரிகளை கண்டறிந்து பொறுப்புக்கூற வைப்பதற்கு அரசாங்கம் மிகக்குறைந்த முயற்சிகளை மட்டுமே மேற்கொண்டுள்ளது என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கைக்கான மனித உரிமை கள் நடைமுறைகள் தொடர்பான அமெரிக்க

02

## மடு அன்னையின் திருவிழா நாளை!

மன்னார், ஒக. 14

மன்னார் மடு மாதா தேவாலய திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா நிறைவு நாள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதன் நவநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை திருவிழா

11

## கபில்ராஜின் உயிரிழப்புக்கும் படையினருக்கும் தொடர்பில்லை

### இராணுவ பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, ஒக. 14

முத்துஐயன்கட்டு குளத்தில் இராணுவத்தினரின் தாக்குதலில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தமைக்கும் இராணுவத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று இராணுவ பேச்சாளர் வருணகமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன், ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு

11

## மட்டக்களப்பில் 700 சிறார் பாதுகாப்பற்ற நிலையில்!

### நாட்டில் 4,000 சிறார் என்கிறார் மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

மட்டக்களப்பு, ஒக. 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் 700 சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர். இந்த எண்ணிக்கை மேல் மாகாணத்தில் 2019 ஆகவும் நாடு முழுவதும் 4 ஆயிரமாகவும் உள்ளது என்று பொலிஸார் கண்டறிந்துள்ளனரென பொதுமக்கள் பாதுகாப்பு

02

## எதிர்க்கட்சிகள் இன்று கொழும்பில் உரையாடல்!

கொழும்பு, ஒக. 14

ஒன்றாக இணைந்து செயல்படுவது தொடர்பில் உரையாடுவதற்காக எதிர்க்கட்சிகள் இன்றைய தினம் கொழும்பில் கூடவுள்ளன.

முன்னாள் அமைச்சர் ஜீ. எல். பீரிஸின் அழைப்பின் பேரில் இரண்டாவது தடவையாக இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு தொடர்பில் கடந்த வாரமும் ஜீ. எல். பீரிஸின் இல்லத்தில்

11

## செம்மணி புதைகுழி குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும்!

### இதுவே அரசின் நிலைப்பாடு என்கிறார் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், ஒக. 14

"செம்மணி புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன. தேவையான வளங்களை அரசாங்கம் வழங்கி வருகிறது. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளது", என்று கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், "நாமல் ராஜபக்ஷவின் நீலப்படையணியில் இருந்த சாணக்கியன்,

11

## பிள்ளையானின் துப்பாக்கிதாரி கைது!

கொழும்பு, ஒக. 14

பிள்ளையான் என்று அறியப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தனின் கட்டளைப்படி இடம்பெற்றன என்று கருதப்படும் கொலைகளுக்கு துப்பாக்கிதாரியாக செயல்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிள்ளையானின் நெருங்கிய சகாவான முஹமட் ஷாகித் என்பவரையே நேற்று புதன்கிழமை காத்தான்குடியிலுள்ள

11

## பொலிஸ் மா அதிபராக பிரியந்த நியமனம்!

கொழும்பு, ஒக. 14

நாட்டின் 37ஆவது பொலிஸ் மா அதிபராக பிரியந்த வீரசூரிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய பொலிஸ்மா அதிபருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கினார்.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசமைப்பின் 61 ஈ (அ)

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 வருடங்களாக அரசு புறக்கணிப்பு

## தட்டாங்குளம் வீதிக்கு நீதி கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு

யாழ்ப்பாணம், ஓக. 14

60 வருடங்களாக புனரமைக்காமல் அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்டுவரும் மீசாலை தட்டாங்குளம் வீதியை புனரமைக்குமாறு உத்தரவிடக் கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் பிரதிவாதிகளான சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் குறித்த வீதியில் வசித்து வரும் வி.வாகீசன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மீசாலை தட்டாங்குளம் வீதி 350க்கும் மேற்பட்ட மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மாணவர்களும், ஏராளமான பொதுமக்களும் பிரயாணம் செய்யப் பயன்படுத்தும் பிரதான வீதியாக காணப்படுகின்றது.

இந்த வீதி கடந்த 60 வருடங்களுக்கு மேலாக எந்த விதமான புனரமைப்பும் செய்யப்படவில்லை. இவ்விடயம் தொடர்பில் சகல அரச திணைக்களுக்குக்கும் தெரியப்படுத்தியும், புனரமைக்குமாறு கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருந்தபோதும் எந்த விதமான முன்னெற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

அத்துடன் குறித்த வீதியினை புனரமைப்பதற்காக மனுதாரருக்கு, முன்னாள் பிதேச சபைச் செயலாளர் 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தினால் 18 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கடிதம் மூலம் அறியத்தந்தும் இன்றுவரை எந்தவிதமான புனரமைப்புப் பணிகளும் நடைபெற்றிருக்கவில்லை. இவ்வாறு குறித்த வீதி புணரமைப்பிற்கான ஆக்கபூர்வமான எந்த ஒரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாததை அடுத்து மனுதாரர் நீதிமன்றத்தை நாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி பிரவின் பிரேமதிலகவும், சிரேஷ்ட சட்டத்தரணிகளான தனுக்க ராகுமத்த மற்றும் நிசித் அபேசூரிய ஆகியோர் மன்றில் ஆஜராகினர்.

இவ்வழக்கு விசாரணைகளை எதிர்வரும் மாதம் 4,5 ஆம் திகதிகளில் நடத்த மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் மனுதாரர்களின் சட்டத்தரணிகளால் கோரப்பட்டுள்ளது. (அ)



# இலவச காணி பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில்!

கிளிநொச்சி, ஓக. 14

ஹிமிகம என்ற திட்டத்தின் வளமான நாடு அழகிய வாழ்வு எனும் தொனிப்பொருளில் இலவச காணி பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு பளை மத்திய கல்லூரியில் நேற்றுக் காலை 9மணியளவில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ.லால் காந்த, காணி நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க, கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், அரசாங்க அதிபர், வடக்கு மாகாண ஆளுநர் என்.வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த இலவச காணி பத்திரம் வழங்கும் நிகழ்வில் பல காலமாக காணிக்கான பத்திரங்கள் இல்லாமல் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் காணி உரிமையாளர்கள் 332 பேருக்கு காணி பத்திரங்கள் வழங்கப்பட்டன. (அ-05)

# செல்லப்பா சுவாமிகள் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 14

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு இன்று வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அபிஷேகத்தைத் தொடர்ந்து காலை 9 மணி தொடக்கம் திருமுறை, நற்சிந்தனை பாடல்கள் பாடப்படும். தொடர்ந்து, 'நல்லூர் தேரடி' எனும் தலைப்பில் ஓய்வு நிலை அதிபர் ஆ. சிவநாதன் உரையாற்றுவார். (ஐ)

# புன்னாலைக்கட்டுவனில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு புன்னாலைக்கட்டுவன், ஜி.ஜி.பொனானம்பலம் வீதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த காணியானது 1990 ஆண்டில் இருந்து 2015ஆம் ஆண்டு வரை இராணுவ கட்டுப்பாட்டில் காணப்பட்டது.

இந்தநிலையில் குறித்த காணியை நேற்று முன்தினம் சுத்தம் செய்தவேளை கைக்குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது. இது குறித்த சுன்னாகம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

சுன்னாகம் பொலிஸார் விடயத்தை மல்லாகம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில், குறித்த குண்டினை மீட்டு செயலிழக்க விசேட அதிரடிப் படையினருக்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# மடு நோக்கி பாதயாத்திரை



மன்னார், ஓக. 14

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழாவை முன்னிட்டு வடமராட்சி கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரை மேற் கொண்டுள்ளனர்.

இவ்வாறு பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ள பக்தர்கள் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் மற்றும் பாண்டியன்குளம் ஆகிய பகுதிகளை வந்தடைந்தனர்.

இவ்வாறு வந்தடைந்த பக்தர்களுக்கு தேவையான உணவு தங்குமிட வசதி மற்றும் இதர வசதிகளை மேற்படி கிராம மக்கள் வழங்கி வருகின்றனர்.

இந்த பாத யாத்திரை இன்று காலை நட்டாங்கண்டல் பகுதியில் இருந்து பாலம் பிட்டி வரைக்குமான சுமார் 35 கிலோமீற்றர் நீளமான அடர் காட்டுப் பாதை வழியாக பாலம் பிட்டி நோக்கி பயணித்து அங்கிருந்து மடுத்திருத் தலத்தை சென்றடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மட்டக்களப்பில்...

அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பாதுகாப்பற்று வாழும் சிறார்களின் தாய் அல்லது தந்தை வெளிநாடு சென்றிருத்தல் அல்லது சிறுவர்களை விட்டுவிட்டு தாய் அல்லது தந்தை வேறு திருமணம் செய்தல் அல்லது போதைப்பொருள் தொடர்பாக கைது செய்யப்பட்டு சிறையில் இருத்தல் போன்ற காரணங்களால் தாய், தந்தை இல்லாது மட்டக்களப்பில் 700 சிறுவர் கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர்.

இதேவேளை மேல் மாகாணத்தில் 2019 சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர். நாடு முழுவதும் 4 ஆயிரம் சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர். எனவே, இந்த குழந்தைகளுக்கு அன்பு, பராமரிப்பு, ஆதரவை வழங்குவதற்கும் அவர்கள் கல்வியை பல்வேறு வழியில் தொடர்வதை உறுதி செய்வதற்கு திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

மேலும், மட்டக்களப்பு - ஆரையம்பதி பகுதியில் பொலிஸ் நிலையம் ஒன்றை அமைக்கத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. 600 பொலிஸார் மாவட் டம் முழுவதும் கடமையாற்ற வேண்டிய சூழலில் 300 பொலிஸாரே உள்ளனர். இந்தக் குறைபாட்டை ஈடுசெய்ய 50 பொலிஸார் மாவட்டத்துக்கு வழங்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# தொண்டைமானாறு ஏரியில் மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் நேற்று அடையாளம்

யாழ்ப்பாணம், ஓக. 14

கடல் நீர் ஏரியில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட பெண் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 40 வயதான ராஜலிங்கம் சுபாஷினி என தெரிவிக்கப்படுகிறது. அவர் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் காலை செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு சென்று வருவதாக கூறிச் சென்றவர் இரவாகியும் வீடு திரும்பவில்லை என அவரது தந்தை தெரிவித்தார்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய கடல் நீர் ஏரியில் சடலமாக மீட்கப்பட்ட பெண் தொடர்பில் புகைப்படங்கள் செய்திகளில் வெளிவந்திருந்தன.

அவரது தந்தையார் தனது மகளை அடையாளம் கண்ட நிலையில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியுள்ளார்.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மீட்கப்பட்ட சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பொறுப்புக் கூறும் விடயத்தில்...

இராஜாங்க திணைக்களத்தின் அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்,

"2024ஆம் ஆண்டில் அரசாங்கமோ அல்லது அதன் முகவர்களோ சட்ட விரோத கொலைகளை புரிந்தமை தொடர்பான பல அறிக்கைகள் வெளியாகின. இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தரவுகளின்படி கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 7 பேர் உயிரிழந்தனர். அத்துடன், கடந்த ஆண்டு 103 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகின.

"ஊடக சுதந்திரம் உள்ளிட்ட கருத்துச் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் இந்த உரிமை கட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. எனி னும், குறித்த காலகட்டத்தில் அரச அதிகாரிகளால் அல்லது அவர்களின் சார்பானவர்களால் வலுகட்டாயமாக காணாமல் போனதாக எந்த தகவலும் பதிவாகவில்லை. எனினும், பல தன்னிச் சையான கைது நடவடிக்கைகள் பதி வாகியுள்ளன.

சித்திரவதை, மனிதாபிமானமற்ற தண்ட னை அல்லது இழிவான தண்டனை அரச அதிகாரிகள் அவற்றை பயன்படுத்தியமை தொடர்பில் நம்பக மான தகவல்கள் உள்ளன. அந்த வகை யில், நாட்டில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறலை ஆவணப்படுத்தும், அரச சார்பற்ற சர்வதேச நிறுவனம் ஒன்று 6 வழக்குகளை ஆவணப்படுத்தியுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் அரச மைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்த போதிலும், கடந்த ஆண்டு இறுதி வரை அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-ஐ)

# பொலிஸ்மா...

பிரிவின்படி, அரசமைப்பு பேரவை புதிய நியமனத்துக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள், சப் இன்ஸ் பெக்டர், பொலிஸ் அத்தியட்சகர் ஆகிய மூன்று கட்டங்களை தாண்டி பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தெரிவான முதலாவது பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவே என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු
14.08.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அமெரிக்காவின் மனித உரிமை அறிக்கை - 2024

2024ஆம் ஆண்டுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை வெளியாகியிருக்கிறது. இலங்கையின் மனித உரிமைகள் விவகாரங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முன்னேற்றங்கள் எதுவும் இல்லை. மாறாக, தொடர்ந்தும் மனித உரிமைகள் மீறலுக்கான சூழலே காணப்படுவதாகக் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. வடக்கு, கிழக்கில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் உரிய விசாரணைகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா ஆண்டுதோறும் உலக நாடுகளின் மனித உரிமைகள் நிலவரத்தை வெளிப்படுத்தும் நோக்கில் குறித்த அறிக்கையை வெளியிட்டு வருகிறது. முதலாவது அறிக்கை 1978ஆம் ஆண்டு வெளியாகியது. அமெரிக்காவின் உதவிகளைப் பெறும் 105 நாடுகளின் மனித உரிமைகள் நிலைமை குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. தற்போது, அண்ணளவாக 200 நாடுகளின் மனித உரிமைகள் விவகாரங்கள் ஆராயப்படுகின்றன. இதன்மூலம், ஏனைய நாடுகளின் மனித உரிமைகளை கண்காணிக்கும் உலகளாவிய அதிகாரமாக நாங்கள் இருக்கிறோம் என்னும் கருத்தையே அமெரிக்கா சுட்டிக்காட்ட முற்படுகிறது. அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச் செயலர் ஜோன் சுலைவான் இது பற்றிக் கூறும் போது, "மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சியை ஊக்குவிப்பதன் ஊடாக அந்த நாடுகளை நாம் வழிநடத்துகிறோம்", என்கிறார்.

இந்த அடிப்படையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் முன்னேற்றமடையவில்லை. மாறாகத் தொடர்ந்தும் மீறப்படுகிறது என்னும் விவரங்களையே அமெரிக்க அறிக்கை உள்ளடக்கியிருக்கிறது. ஒரு வகையில் இலங்கை அரசாங்கத்தின்மீதான அழுத்தமாகவே இதனை நோக்க வேண்டும். அதேவேளை இன்னொரு புறம் இதனை தமிழ் மக்களுக்கு சாதகமானதாகவும் நோக்கலாம். ஆனால், அறிக்கையில் இலங்கையின் நிலைமைகள் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதால் அது உடனடியாக தமிழ் மக்களுக்கு நன்மையாக மாறிவிடுமென்று எண்ணினால் அது தவறானது.

அமெரிக்க வெளிவிவகார கொள்கையில் மனித உரிமைகள் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகும். இந்த அடிப்படையில்தான் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஒவ்வோர் ஆண்டும் குறித்த அறிக்கையை வெளியிட்டு வருகிறது. இவ்வாறு அறிக்கையை வெளியிட்டாலும்கூட மறுபுறம் குறித்த அறிக்கையில் விமர்சிக்கப்பட்டுள்ள அனைத்து நாடுகளுடனும் அமெரிக்கா தொடர்ந்தும் இணைந்து செயல்படுகிறது.

குறிப்பாக, இலங்கையை எடுத்துக் கொண்டால் இலங்கையின் இறுதிகட்ட யுத்தத்தின்போது மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டவர்களாக அடையாளப்படுத்தப்படும் இராணுவ அதிகாரிகள் சிலர்மீது அமெரிக்கா தடை வித்திருக்கிறது. ஆனால், மறுபுறம் இலங்கை இராணுவத்துடன் பணியாற்றி வருகிறது. இவ்வாறான அறிக்கைகள் அதிகம் குறித்த நாடுகளின் தனிநபர்களை இலக்கு வைக்கும் நோக்கம் கொண்டதே தவிர, நாட்டையே இலக்கு வைப்பதல்ல.

தமிழ் தரப்புகள் ஆண்டுதோறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் எழுத முற்படுகின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டு, தங்களுக்குள் முட்டியும் மோதியும் கொள்கின்றன. ஆனால், உலக அதிகார மையமாகவும் மனித உரிமைகள் மீறலை அடையாளப்படுத்தும் அறிக்கையிடும் தனியான ஏகபோக கட்டமைப்பையும் கொண்டிருக்கின்ற அமெரிக்காவை நோக்கி தமிழ் தரப்புகள் இதுவரையில் செயல்பட்டதில்லை - ஏன்? உண்மையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தை நோக்கி தமிழ் தரப்புகள் செயலாற்ற வேண்டும். வெறுமனே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் மட்டும் மல்லுக்கட்டிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

# அரசசார்பற்ற அமைப்புகள் சட்டமூல பிரதியை உடன் அனுப்பிவையுங்கள்!

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பொது பாதுகாப்பு அமைச்சுக்குக் கடிதம்

கொழும்பு, ஓக. 14

அடிப்படை உரிமைகளில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியப்பாடு உடைய எந்தவொரு உத்தேச சட்டம் தொடர்பிலும் ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் ஆரம்பத்திலேயே பெறப்பட வேண்டும். அதற்கமைய அரச சார்பற்ற அமைப்புக்கள் சட்டமூல வரைபின் பிரதியை இயலுமானவரை விரைவாக தமக்கு அனுப்பி வைக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் எல்.ரி.பி.தெஹிதெனியவினால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டி.டபிள்யூ.ஆர்.பி. செனவிரத்னவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: -

உங்களது அமைச்சின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டிருக்கும் அரச சார்பற்ற அமைப்புக்கள் (பதிவு செய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்ட வரைபு தொடர்பில் உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறோம்.

இச்சட்ட வரைபானது அரச சார்பற்ற அமைப்புக்களைப் பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றுக்கு வாய்ப்பு ஏற்படுத்துவதையும், 1980 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புக்கள் சட்டத்தை நீக்குவதையும் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கிறது என அறிய முடிகிறது.

இந்நிலையில் 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10 (சி) பிரிவின்கீழ் எமது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை நிறைவேற்றுவதற்கு அரச சார்பற்ற அமைப்புக்கள் சட்ட வரைபின் பிரதியொன்றை எமக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலம் தொடர்பில் எமது ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட சில அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் சட்டமா அதிபரால் உயர்நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்கப்பட்ட முன்மொழிவுகளில் உள்வாங்கப்பட்டன என்பதை நீங்கள் அறிந்திருக்கக்கூடும்.

அந்தவகையில் அரச சார்பற்ற அமைப்புக்கள் (பதிவு செய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்டமூலமானது உங்களது அமைச்சினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னரேயே அதுகுறித்து அவதானிப்புக்களையும், பரிந்துரைகளையும் முன்வைக்கக்கூடிய நிலையில் ஆணைக்குழு இருக்கிறது.

ஆனால் பொதுவாக அடிப்படை உரிமைகளில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியப்பாடு உடைய எந்தவொரு உத்தேச சட்டம் தொடர்பிலும் ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் ஆரம்பத்திலேயே பெறப்படவேண்டும். இவ்வாறானதொரு பின்னணியில் அரச சார்பற்ற அமைப்புக்கள் சட்டமூல வரைபின் பிரதியை இயலுமானவரை விரைவாக ஆணைக்குழுவுடன் பகிர்ந்துகொள்ளுங்கள் - என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# அரசுக்கு எதிராக மக்கள் விரைவில் ஒன்றிணைவர்

## கூறுகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஓக. 14

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எவரும் சூழ்ச்சி செய்யவில்லை. ஆட்சிக்கு வருவதற்கு தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு குறிப்பிட்ட போலியான வாக்குறுதிகள் மற்றும் வெறுப்புக்கள் அரசாங்கத்துக்கு எதிரானதாக அமையும். நாட்டு மக்கள் வெகுவிரைவில் அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைவார்கள் என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-


ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எதிர்க்கட்சிகள் சூழ்ச்சி செய்வதாக குறிப்பிட்டார்.

குறைகளையும், விமர்சனங்களையும் தாங்கிக்கொள்ளும் மனநிலை ஜனாதிபதிக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ கிடையாது. அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எவரும் சூழ்ச்சி செய்யவில்லை.

ஆட்சிக்கு வருவதற்கு தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு குறிப்பிட்ட போலியான வாக்குறுதிகள் மற்றும் வெறுப்புக்கள் அரசாங்கத்துக்கு எதிரானதாக அமையும். நாட்டு மக்கள் வெகு விரைவில் அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது மகன்கள் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி கடந்த காலங்களில் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது. அந்த குற்றச்சாட்டுக்கள் பொய் என்று அவர்களே குறிப்பிடும் காலம் தற்போது தோற்றம் பெற்றுள்ளது. செயற்கைக்கோள் திட்டம் தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் வெளிப்படுத்திய உண்மை பாராட்டத்தக்கது- என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 14 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 28
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : பஞ்சமி




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**இடபம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். புது பொருள் வந்து சேரும்.

**மிதுனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர் நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம்.

**கன்னி**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**விருச்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். பிரச்சினை தீரும். நன்மை கிடைக்கும் நாள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். துணிச்சலுடன் செயல்படும் நாள்.

**கும்பம்**
கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவுக் கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். பிரச்சினை வந்து நீங்கும்.

# வவுனியா பொருளாதார நிலையத்தை செப்ரெம்பரில் திறக்க நடவடிக்கை

## அமைச்சர் வசந்த சமரசிங்க

வவுனியா, ஓக. 14

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் திருத்தங்களை செய்து அடுத்த மாத முற்பகுதியில் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா மதவுவைத்தகுளத்தில் அமைந்துள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்று பார்வையிட்டார்.

8 வருடங்களுக்கு முன்னர் வவுனியாவில் 20 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டில் அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையம் இதுவரை இயங்காமல் உள்ளது. இந்நிலையில் அதனை இயங்கச்செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் அதற்கான முன்னாயத்த பணிகளை அமைச்சர் நேற்று நேரில் பார்வையிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர்,

பல இலட்சம் ரூபாய் பணம் இந்த பொருளாதார மத்திய நிலையத்துக்கு செலவிடப்பட்டுள்ளது. எனவே, இந்த மாத இறுதிக்குள் இதில் செய்ய வேண்டிய திருத்தப்பணிகளை செய்து அடுத்த மாத (செப்ரெம்பர்) முற்பகுதிக்குள் அதனை திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், ஏற்கனவே வவுனியா மொத்த வியாபார சந்தையில் உள்ள 35 வியாபாரிகளுக்கு மத்திய நிலையத்தில் உள்ள கடைகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். மிகுதி 15 கடைகள் விவசாய அமைப்புகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் - என்றார்.

மேலும், மன்னாரில் நிறுவப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி திட்டத்திற்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு உள்ளது. எனவே, அந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்துக்கு வர முடியும். அந்தத் திட்டத்தில் தொழில்நுட்ப பிரச்னைகள் உள்ளனவா என்பது தொடர்பாக ஆராயவேண்டும். அபிவிருத்தி பணிகளையும் மக்களுக்கு செய்யவேண்டிய தேவை உள்ளது.

நாட்டில் மின்சாரம் தொடர்பாக பல பிரச்னைகள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்யவேண்டும். எனவே மக்களின் எதிர்ப்பையும் கருத்தில் கொண்டு அந்தத் திட்டம் தொடர்பான முடிவு அறிவிக்கப்படும் - என்றார்.

அமைச்சரின் இந்தக் களப் பயணத்தில், பாராளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன், அரசஅதிபர் பி. ஏ. சரத்சந்திர, மேலதிக அரசதிபர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ. பிரதாபன், அமைச்சின் அதிகாரிகள்,உத்தியோ கத்தர்கள், தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ-10)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று...!

யாழ்ப்பாணம், ஓக. 14

டான் தொலைக்காட்சி குழுமத்தின் ஓம் தொலைக் காட்சி நடத்தும் 'சைவம் தழைத் தோங்க...' நிகழ்ச்சி இன்று இரவு 7 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நெறிப்படுத்தலில் மாணவர்கள் சிவகுமார் அஸ்மிதன், சிவகுமார் கவிவாணன் ஆகியோர் தேவாரம் இசைப்பர்.

தொடர்ந்து இந்திரா பிரியதர்சினி சீவரத்தினத்தின் நெறியாள்கையில் சைவ பரிபாலன சபை அறநெறி பாடசாலை மாணவியரான சிவாஞ்சலி நந்தகுமார், ஜனுசாதனா றொசான், சிறீகிருஷ்ணிகா தனஞ்சயன், அக்ஷரா பிரதீஸ்வரன் ஆகியோரின் நடன நிகழ்வு அரங்கேறும்.

இதைத் தொடர்ந்து 'சைவ களஞ்சியம்' விநாடி வினா போட்டி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறும். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஓக. 14

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குழு இசை நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக இசைத் துறை மாணவர்களின் பாட்டு இடம்பெறும். அணி செய் கலைஞர்களாக வயலின் - இ. நிறோசன், மிருதங்கம் - ஞா. வசந், கெஞ்சிரா - பு. வேணுகோபன் ஆகியோர் பங்கேற்பர்.

இசை அரங்கில் பாட்டு - ப. சிவமைந்தன், வயலின் - இ. நிறோசன், மிருதங்கம் - வ. றமண சர்மா, கெஞ்சிரா - ற.லய சர்மா, முகர்சிங் - ற. கானா மிருதசர்மா, கடம் - உ. ஹிதுசன். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஓக. 14

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் தினமும் முற்பகல் 10.00 மணிக்கு "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வை நடத்தி வருகிறது.

இதில், இன்று வியாழக்கிழமை திருமதி பங்கையச் செல்வி முகுந்தனின் மாணவர்களின் பஜனை நிகழ்வும் அநுராகவின் கலை நிலைய மாணவர்கள் வழங்கும் பக்தி இசைக்கானங்களும் வீணை இசை நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஓக. 14

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் அருளுரையை ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் வழங்கி வருகிறார்.

இதில், இன்று வியாழக்கிழமை இரவு 8.00 - 8.30 மணி வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் 'மனத்துன்பத்தை எப்போது கடப்பேன்?', என்ற தலைப்பில் அருளுரை நடைபெறும். (ஐ)

# இணுவில் நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்த சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் அரங்க ராமலிங்கம் இணுவில் பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப் பாக வழங்கினார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நூலகத்துக்கு வருகை தந்த அவர், நூலகத்தின் தலைவர் ம. கஜந்தரூபன், உதவி நூலகர் திருமதி கலாவாணி சுபேந்திரன் இந்த நூல்களை கையளித்தார்.

அத்துடன், நூலகத்தையும் அவர் பார்வையிட்டார். (ஐ-05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு செல்லும் 50 சதவீதமான பட்டதாரிகள் நாடு திரும்புவதில்லை

## ஆய்வில் வெளிவந்தது தகவல்

கொழும்பு, ஓக. 14

**நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறும் மாணவர்களில் 50 வீதத்துக்கும் அதிகமானோர் நாட்டை விட்டு வெளியேறி, மீண்டும் நாட்டுக்குத் திரும்புவதில்லை என ஆய்வில் தெரியவந்துள்ளது.**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரல மற்றும் லக்ஷ்மன் குமார ஆகியோரால் நடத்தப்பட்ட தொடர்ச்சியான ஆய்வில் இந்த விடயம் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில், விஞ்ஞானம் சார்ந்த பட்டப்படிப்புகளைப் படிக்கும் அனைத்து மாணவர்களும் நாட்டை விட்டு வெளியேறி, திரும்பி வருவதில்லை என ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போது அரச பல்கலைக் கழகங்களில் சுமார் 142,000 இளங்கலை மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

அவர்களில் 25 வீதமானோர் கலைப் பிரிவிலும், 20 வீதமானோர் முகாமைத்துவம் மற்றும் வணிகப் பிரிவிலும், 13 வீதமானோர் பொறியியல் பிரிவிலும் மருத்துவம், பல் மருத்துவம், கால்நடை மருத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதாரம் ஆகியவற்றில் 10 வீதமானோரும் மற்றும் விவசாயம் மற்றும் கணினி விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் 11 வீதமானோரும் கல்வி கற்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சமீப காலங்களில் ஆண்டுதோறும் தேசிய பல்கலைக்கழகங்களுக்குச் சுமார் 44,000 மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர்.

2023 ஆம் ஆண்டில் மொத்தப் பட்டதாரி (இளங்கலைப் பட்டம்) வெளியீடு 33,306 ஆக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக கல்விக்காக அரசாங்கம் சுமார் ரூ. 87 பில்லியனை செலவிட்டுள்ளது.

இதில் ரூ.69.9 பில்லியன் தொடர்ச்சியான செலவும் ரூ.16.7 பில்லியன் மூலதனச் செலவும் அடங்கும்.

அதற்கு மேலதிகமாக அந்தந்த பல்கலைக்கழகங்கள் தங்கள் சொந்த வருவாய் நிதியையும் செலவிடுவதாகவும் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள மேலும் கூறினார்.

நிலைமையைக் கருத்தில் கொண்டு, அரச பல்கலைக்கழகங்களில் இலவச உயர்கல்வியை முடித்துவிட்டு இடம் பெயரும் இலங்கை மாணவர்கள் தங்கள் கல்விச் செலவை அரசாங்கத்திடம் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று ஆய்வு பரிந்துரைக்கிறது.

அரசாங்கத்தால் செலவைச் செலுத்தச் சொல்ல முடியாவிட்டால், குறைந்தபட்சம் அவர்கள் இலங்கைக்கு 50,000 அமெரிக்க டொலர்களை அனுப்ப வேண்டும்.

அநேகமாக அவர்கள் இந்தப் பணத்தை நாட்டில் உள்ள தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும், இது நாட்டிற்கும் சில நன்மைகளை வழங்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் உள்ள 19 அரச பல்கலைக்கழகங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்தப் பரிந்துரை அமைந்துள்ளது.

ஆய்வின்படி, அரசாங்கம் ஆண்டுதோறும் ஒரு மாணவருக்கு சுமார் ரூ.500,000 செலவிடுகிறது, இது பட்டப்படிப்பு திட்டத்தைப் பொறுத்து ஆண்டுக்கு ரூ.400,000 முதல் ரூ.1.4 மில்லியன் வரை மாறுபடும்.

இருப்பினும், அதிக எண்ணிக்கையிலான பட்டதாரிகள், குறிப்பாக விஞ்ஞானம், விவசாயம் மற்றும் பொறியியல் பட்டதாரிகள் இடம்பெயர்ந்து திரும்பி வருவதில்லை எனவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் தற்போதைய வேலையின்மை நிலைமை காரணமாக, பட்டதாரிகளை இலங்கையில் தங்க, கட்டாயப்படுத்துவது நடைமுறைக்குச் சாத்தியமில்லை என்பதையும் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

(அ)

# வாகன விபத்தில் சிறுமி பலி!

கொழும்பு, ஓக. 14

சிகிரியம திகம்பதஹா வீதியில் மோட்டார் சைக்கிள்-கார் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்றரை வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தம்புள்ளை, சியம்பலாகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த சசித்மி நெஹன்சா அலுவிஹாரே என்ற சிறுமி ஆவார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற நபர், அவரது மகளை முன் இருக்கையில் வைத்துக்கொண்டு பயணித்துள்ளார். இதன்போது மோட்டார் சைக்கிள் ஒரு காரின் பின்புறத்தில் மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் கார் மீது மோதியதில், மோட்டார் சைக்கிளின் முன் இருக்கையில் இருந்த மகள் வீதியில் தூக்கி வீசப்பட்டதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, விபத்துக்குள்ளான காரும் பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்டதாக சிகிரியா பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தாய் சிகிரியா பகுதியில் உள்ள ஒரு சுற்றுலா ஹோட்டலில் பணி புரிவதாகவும், அவரை வேலையிலிருந்து வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்காக சென்றுக்கொண்டிருந்த போதே இந்த விபத்து சம்பவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

தனது மகளுடன் தனது மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, அவருக்கு முன்னால் சென்ற கார் திடீரென பிரதான வீதியில் நின்றதாகவும், மோட்டார் சைக்கிளைக் கட்டுப்படுத்த முடியாமல் கார் மீது மோதியதாகவும் உயிரிழந்த சிறுமியின் தந்தை தெரிவித்தார்.

(அ)

# பொலிஸ்மா அதிபரிடம் நேரடியாக முறைப்பாடளிக்க வட்ஸ்அப் இலக்கம்

கொழும்பு, ஓக. 14

குற்றங்கள் மற்றும் பிற பிரச்னைகள் குறித்து பொதுமக்கள் நேரடியாக பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடளிப்பதற்கு இலங்கை பொலிஸ் பிரத்தியேக வட்ஸ்அப் எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.

பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள பிரியந்த வீரசூரியவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முயற்சி, பொது மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதையும், குடிமக்களும் காவல்துறை அதிகாரிகளும் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துடன் நேரடியாக தகவல்களைப் பகிர்ந்து கொள்ள அனுமதிப்பதன் மூலம் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதன்படி, 071-8598888 என்ற புதிய வட்ஸ்அப் எண் நேற்று முதல் அமுலுக்கு வந்தது.

குற்றங்கள் அல்லது பொலிஸ்மா அதிபரின் அவதானம் தேவைப்படும் பிற விடயங்கள் தொடர்பான குறுஞ்செய்திகள், படங்கள் மற்றும் காணொளிகளை அனுப்புவதற்கு இந்த எண்ணை பயன்படுத்த முடியும்.

இருப்பினும், இந்த எண்ணுக்கு வரும் தொலைபேசி அழைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

(அ)

# எந்தவொரு செயற்கைக்கோளும் இலங்கையில் பெயரில் இல்லை!

கொழும்பு, ஓக. 14

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான சர்வதேச ஒருங்கிணைப்புக்குப் பொறுப்பான ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனமான சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் கீழ், இலங்கை என்ற பெயரில் எந்தவொரு செயற்கைக் கோளும் பதிவு செய்யப்படவில்லை என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியத்தின் உறுப்பினரான இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு இரண்டு புவிசார் சுற்றுப்பாதை நிலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைகள் இலங்கைக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும், ஆப்கானிஸ்தான், கிர்கிஸ்தான், மோல்டோவா, நேபாளம், தஜிகிஸ்தான் மற்றும் ருமேனியா போன்ற பிற நாடுகளும் அவற்றில் தடையின்றி செயல்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் தரவுகளின்படி, இந்த சுற்றுப்பாதை நிலைகளில் "இலங்கை" என்ற பெயரில் எந்தவித செயற்கைக்கோளும் தற்போது இல்லை.

சுப்ரீம்செட் நிறுவனம், "சுப்ரீம்செட்-1" என்ற பெயரில் செயற்கைகோளை ஏவியதாகவும், பின்னர் அதனை "சைனா செட்-12" என பெயர் மாற்றம் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

எனினும், இலங்கையின் நிலைகளின் கீழ், சர்வதேச தொலைதொடர்பு ஒன்றியத்தின் தரவுத்தளத்தில் குறித்த எந்த பெயரிலும் செயற்கை கோள்களும் இல்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

# இந்திய - இலங்கை கடற்படைகளின் உயர்மட்ட கூட்டம்

கொழும்பு, ஓக. 14

இந்திய கடலோரக் காவல் படைக்கும் இலங்கை கடலோரக் காவல்படைக்கும் இடையிலான 8ஆவது உயர்மட்டக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை கடலோரக் காவல் படையின் பணிப்பாளர் ரியர் அட்மிரல் வை.ஆர்.சேரசிங்க மற்றும் இந்திய கடலோரக் காவல்படையில் பணிப்பாளர் பரமேஷ் சிவமணி ஆகியோரின் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான மற்றும் நீடித்த கடல்சார் கூட்டாண்மை தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், கடல் பாதுகாப்பு மற்றும் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றைத் தொடர்ச்சியாக உறுதி செய்வதற்கு இரு தரப்பும் இதன்போது இணங்கியுள்ளன.

(அ)

# நாட்டின் வேலையின்மை வீதம் 3.8ஆக குறைந்தது!

கொழும்பு, ஓக. 14

இந்த வருடத்தில் முதல் காலாண்டில் இலங்கையின் வேலையின்மை வீதம் 3.8 ஆகக் குறைந்துள்ளது என அதிகாரப்பூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

அதிகாரபூர்வ தரவுகளின் படி, வேலையின்மை வீதம் ஒரு வருடத்துக்கு முன்பு 4.5 வீதமாகவும், முந்தைய காலாண்டில் 4.2 வீதமாகவும் இருந்தது.

இதனிடையே, ஆண்டின் முதல் காலாண்டில் தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை 8.13 மில்லியனாக உயர்ந்துள்ளது.

இது கடந்த ஆண்டு 7.90 மில்லியனாக பதிவாகியிருந்தது.

அதற்கமைய, கடந்த 12 மாதங்களில் சுமார் 237,912 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கைத்தொழில்துறையில் 2.15 மில்லியனாகவும், சேவை துறையில் 4.09 மில்லியனாகவும் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ள அதே நேரத்தில் விவசாயத் துறை வேலைவாய்ப்பு 1.91 மில்லியனாகக் குறைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் நாணய நெருக்கடி மற்றும் கடனை திருப்பிச் செலுத்தத் தவறியதைத் தொடர்ந்து, ஏற்பட்ட நெருக்கடியின் உச்சத்தில், 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இலங்கையின் வேலையின்மை விகிதம் 5.2 சதவீதமாக உயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# 1,000 இளம் தொழில்முயற்சியாளர்களை நாடு முழுக்க உருவாக்க தேசிய திட்டம்

கொழும்பு, ஓக. 14

1,000 இளம் தொழில்முனைவோரை உருவாக்கும் தேசிய திட்டம் குறித்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மன்ற நிறுவனத்தில், தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அமைச்சு மற்றும் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் என்பன இணைந்து செயல்படுத்தும் இந்த முயற்சி திட்டமானது, திறன்கள், உற்பத்தித்திறன் மற்றும் ஏற்றுமதி திறனை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சியாண்மை துறையை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

100 தொழில்முனைவோருடன் கம்பஹாவில் நடத்தப்பட்ட வெற்றிகரமான முன்னோடித் திட்டத்துக்குப் பின்னர், இந்த வருடம் 17 மாவட்டங்களுக்கும், அடுத்த ஆண்டு மீதமுள்ள எட்டு மாவட்டங்களுக்கும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது.

நிலையான வணிக வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான பயிற்சி, ஆலோசனை ஆதரவு மற்றும் வளங்களை பங்கேற்பாளர்கள் பெறுவார்கள் என தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி கட்டமைப்புகள், மாவட்டக் குழுக்கள், ஏற்றுமதி திட்டங்கள் மற்றும் உற்பத்தித் திறன் விருதுகள் குறித்தும் இந்த நிகழ்வின்போது அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுகத்தை முன்னிலைப்படுத்தியே இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் உலக வர்த்தகங்கள்!

## அமெரிக்கத் தூதர் ஜூலி சங் கருத்து



கொழும்பு, ஓக. 14

**இலங்கையின் துறைமுகங்களில் குறிப்பாக தென் ஆசியாவின் முன்னணி இடமாற்று மையமான கொழும்பு துறைமுகத்தை முன்னிலைப்படுத்தியே இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் உலக வர்த்தகங்கள் இடம்பெற்று வருகின்றன என அமெரிக்கத் தூதர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

இலங்கை துறைமுக அதிகார சபையுடன், இலங்கை துறைமுகத்தைப் பற்றி அறிய ஆர்வமுள்ள 50க்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் கலந்துகொண்ட அமெரிக்க வணிகத் துறையின் இணைய வழி கருத்தரங்கில் உரையாற்றிய போதே அமெரிக்கத் தூதர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது, அமெரிக்க நிறுவனங்களுக்கு இலங்கை துறைமுகங்கள் தொடர்பில் அறியும் வாய்ப்பு கிட்டியது.

மேம்பட்ட அமெரிக்க துறைமுகத் தொழில்நுட்பங்கள், இலங்கையின் சரக்கு கொள்ளளவையும் செயல்திறனையும் விரிவாக்க உதவியது.

அமெரிக்கப் பொருட்களை உலக சந்தைகளுக்கு விரைவாகக் கொண்டு செல்லச் செய்வது மற்றும் அமெரிக்கா-இலங்கைக்கிடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டவர் பலி!

கொழும்பு, ஓக. 14

சீதுவ பொலிஸ் பிரிவின் எரிய கஹலிந்த வீதிப் பகுதியில் ஒரு குழுவினரால் கூரிய ஆயுதங்களால் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சீதுவ, எரிய கஹலிந்த வீதி பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

ஒரு குழுவினரால் கூரிய ஆயுதங்களால் தாக்கி படுகாயமடைந்த ஒருவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார்.

மேலும், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் குறித்து எவ்வித தகவல்களும் வெளிவராத நிலையில், சந்தேக நபர்களைக் கைது செய்ய சீதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# "சிறப்புரிமை இரத்து தொடர்பில் எவ்வித சட்ட நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை"

கொழும்பு, ஓக. 14


சிறப்புரிமைகள் இரத்து செய்யப்படுவதற்கு எதிராக, முன்னாள் ஜனாதிபதிகள் நான்கு பேருடன் இணைந்து தாமும் போராடுவதாக வெளியாகியுள்ள தகவலை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மறுத்துள்ளார்.

குறித்த தகவல் முற்றிலும் தவறானவை என தெரிவித்து சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ளது.

அந்தவகையில், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள் இரத்து செய்யப்படவுள்ளமை தொடர்பில், சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க எவ்வித சட்ட நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையின் வளர்ச்சிக்கு ஆஸி. தொடர்ந்தும் ஆதரவு!

## விடைபெறும் தூதுவர் உறுதி



கொழும்பு, ஓக. 14

இலங்கையின் சுற்றுலா, கல்வி மற்றும் தொழிற்கல்வி போன்ற துறைகளின் வளர்ச்சிக்கு ஆஸ்திரேலியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று ஆஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீபன்ஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீபன்ஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தனது பதவிக்காலம் நிறைவடைந்து இலங்கையை விட்டு வெளியேறும் போல் ஸ்டீபன்ஸின் எதிர்கால செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போதும் அதற்குப் பின்னரும் ஆஸ்திரேலிய தூதுவர் வழங்கிய ஆதரவை ஜனாதிபதி இதன்போது பாராட்டினார்.

மேலும், கடந்த காலங்களில் ஆஸ்திரேலிய இராஜதந்திரிகள் பலர் இந்நாட்டுக்கு விஜயம் செய்ததை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, ஆஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் தூதுவர் வழங்கிய ஆதரவைப் பாராட்டினார்.

இந்நாட்டு சுற்றுலா, கல்வி மற்றும் தொழிற்கல்வி போன்ற துறைகளின் வளர்ச்சிக்கு ஆஸ்திரேலியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று ஆஸ்திரேலிய தூதுவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# உலக சுகாதார அமைப்பின் கூட்டம் இலங்கையில்

கொழும்பு, ஓக. 14

உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியக் குழுக் கூட்டத்தின் 78ஆவது அமர்வை நடத்துவதற்கு இலங்கை அதிகாரப் பூர்வமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்த உயர்மட்ட மாநாட்டில் 11 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள், உலக சுகாதார அமைப்பின் செயலகம்,

ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்புகள், அபிவிருத்தி பங்குதாரர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

இந்த நிகழ்வு கொழும்பில் நடைபெறவுள்ளதுடன், இது பிராந்தியத்தில் மிக முக்கியமான சுகாதாரக் கொள்கை கூட்டங்களில் ஒன்றாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# மலேசிய தூதுவர் அநுரவுடன் பேச்சு

கொழும்பு, ஓக. 14

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கும் இலங்கைக்கான மலேசியத் தூதுவர் பத்லி ஹிஷாம் பின் ஆதமுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான நெருங்கிய உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது இரு தரப்பினரும் கவனம் செலுத்தினர். விசேடமாக மலேசியாவின் சுற்றுலா, வர்த்தகம் மற்றும் கல்வி ஆகிய துறைகள் மற்றும் அண்மைய கால வெற்றிகள் குறித்த தனது அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாக மலேசியத் தூதுவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)

# "எதிரணி ஆட்சிக் கவிழ்ப்பு சூழ்ச்சியில் ஈடுபடவில்லை"

கொழும்பு, ஓக. 14

"ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எவ்வித சூழ்ச்சியும் செய்யவில்லை." என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

இந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அந்த பொறுப்பில் இருந்து விலகிவிடமுடியாது. நாம் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு சூழ்ச்சி செய்யவில்லை. எனவே, சிறுபிள்ளைத்தனமான அறிவிப்புகளை விடுப்பதை ஜனாதிபதி நிறுத்தவேண்டும்.

செய்ய முடியும் என உறுதியளித்தே ஆட்சிக்கு வந்தார்கள். எனவே, உறுதிமொழிகளை நிறைவேற்றிக்காட்ட வேண்டும். அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும்வரை நாம் அரசாங்கத்தை பாதுகாப்போம்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்திக்குள் எவ்வித குழப்பமும் இல்லை-என்றார். (அ)

# பகல் கனவு காணாது உங்கள் கட்சிகளை பாதுகாப்பதில் அவதானம் செலுத்துங்கள்!

## சஜித், நாமலுக்கு அறிவுரை கூறிய நளிந்த

கொழும்பு, ஓக. 14

அரசாங்கத்துக்குள் எந்த முரண்பாடுகளோ பிளவுகளோ இல்லை. அது எதிர்க்கட்சிகளின் பகல் கனவாகும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அமைச்சரவை ஒற்றுமையுடன் ஒருமித்து செயற்பட்டு வருகிறது. எனவே சஜித் பிரேமதாஸவும் நாமல் ராஜபக்ஷவும் அவர்களது கட்சிகளைப் பாதுகாத்துக் கொள்வதில் அவதானம் செலுத்துவதே பொறுத்தமானது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-அரசாங்கத்துக்குள் எந்த முரண்பாடுகளோ பிளவுகளோ இல்லை. அது எதிர்க்கட்சிகளின் பகல் கனவாகும். அரசாங்கத்தில் [illegible] இணைத்துக் கொண்டு ஆட்சியமைக்க சஜித் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர். இவை சில ஊடகங்களால் உருவாக்கப்படும் செய்திகளாகும். ஆனால் அவ்வாறு எந்த சூழலும் அரசாங்கத்தில் இல்லை.

எந்த காரணத்தை அடிப்படையாகக் கொண்டும் பிரதமரை பதவி நீக்க நாம் எதிர்பார்க்கவில்லை. நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அமைச்சரவை ஒற்றுமையுடன் ஒருமித்து செயற்பட்டு வருகிறது. ஒவ்வொரு அமைச்சுக்கள் தொடர்பிலும் புரிதலுடன் செயற்பட்டு வருகின்றோம். நீங்கள் உங்கள் கட்சிகளைப் பார்த்துக் கொள்ளுங்கள். நாம் பிளவுபடுவோம் எனப் பார்த்துக் கொண்டிருப்பதால் பிரயோசனம் இல்லை என்று சஜித்திடமும், நாமலிடமும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதற்கு முன்னரும் ஜே.வி.பி., என்.பி.பிக்கு இடையில் முரண்பாடுகள் காணப்படுவதாகவும் வதந்திகள் பரப்பப்பட்டன. லால் காந்த அரசாங்கத்திலிருந்து விலகுவார் எனக் கூறினர். இவ்வாறான வதந்திகள் இரு நாட்கள் மாத்திரமே பெரிதாகப் பேசப்படும். ஆனால் அவற்றால் எவ்வித பிரயோசனமும் இல்லை. நாம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதோடு, அரசியல் கலாசாரத்தை மாற்றுவோம்.

அவற்றை பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்குமாறு எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச மற்றும் தனியார் பஸ்களில் செயற்கை நுண்ணறிவு கமெரா!

கொழும்பு, ஒக. 14

நாட்டில் நீண்டதூர பயணங்களை மேற்கொள்ளுகின்ற பேருந்துகள் மூலம் இடம்பெற்று வருகின்ற வீதி விபத்துக்ளை குறைப்பதற்கு புதிய திட்டம் ஒன்று தயரிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தனியார் துறையின் தலையீட்டில் முதலாவது முன்னோட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த முன்னோடித் திட்டத்தின் முதலாம் கட்டம் நேற்று முன் தினம் கதிர்காமம் டிப்போவில் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வின் போது பல நீண்ட தூர பேருந்துகளில் ஏ.ஐ. கமெராக்கள் பொருத்தப்பட்டன. பல நீண்ட தூர பேருந்துகளில் ஏ.ஐ. கமெரா அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளதுடன் பல டிப்போக்களுக்கு நேரடி விஜயம் மேற்கொண்டு அமைச்சர் நிலைமைகளை ஆராயந்துள்ளார்.

அதன்படி, அரச மற்றும் தனியார் பேருந்துகளில் செயற்கை நுண்ணறிவு கமெரா அமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முயற்சியின் கீழ், பேருந்து சாரதியின் நடத்தைகளை கண்காணிக்கவும், தேவைப்படும்போது எச்சரிக்கைகளை வழங்கவும் 40, ஏ.ஐ. கமெராக்கள் பேருந்துகளில் முதற்கட்டமாக நிறுவப்படவுள்ளன.

இந்த அமைப்பு மூலம் சாரதியின் சோர்வு, மயக்கம் அல்லது கண் மூடல் போன்ற அறிகுறிகளைக் கண்டறிய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் போக்குவரத்து விதிகள் மற்றும் ஆசனப் பட்டி பயன்பாடு ஆகியவற்றை கண்காணிக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த செயற்கை நுண்ணறிவு கெமராக்கள் மூலம் சாரதிகளுக்கு சமிக்ஞைகளை வழங்கப் படும் என்றும் இதன்மூலம் பேருந்தை கட்டுப்படுத்தவும் இந்த தொழில் நுட்பம் பயன்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈஸ்டர் தாக்குதல் குறித்து

## போலிக் குற்றச்சாட்டு முன்வைத்தே ஆட்சிக்கு வந்தது அநுர அரசாங்கம்!

### சாடுகின்றார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஒக. 14

**பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் பற்றி போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது எனவும் அவர் கூறினார்.**

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் இன்று முழுமையான அரசியலாகிவிட்டது. குண்டுத்தாக்குதல்கள் பற்றி போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்ற போது கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக செயற்பட்டார்.

இவர் தனது பதவிக்கான பொறுப்பில் இருந்து விலகியுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு குற்றச்சாட்டுக்குள்ளானவரை பதவியில் வைத்துக்கொண்டு எவ்வாறு சுயாதீனமான முறையிலான விசாரணைகளை முன்னெடுக்க முடியும் எமக்கு இதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது.

ஆகவே இவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் கிடைத்த புலனாய்வுத் தகவல்களை கொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமல் அவற்றை அலுவலக மேடையில் பத்திரப்படுத்தி வைத்தவர்களே, இந்த அரசாங்கத்தில் உயர் பதவிகளில் உள்ளார்கள். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

## மன்னார் காற்றாலை செயற்திட்ட கட்டுமானப் பணிகளுக்கு தடை!

மன்னார், ஒக. 14

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மன்னார் காற்றாலை செயற்திட்டத்திற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், அந்த திட்டத்துக்கான கட்டுமானப் பணிகளை எதிர்வரும் 14 நாட்களுக்கு தடை விதித்து மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நடைபெற்று வரும் காற்றாலை இரண்டாம் கட்டத் திட்டத்துக்கு எதிராக, மன்னார் மாவட்டம் மாத்திரமன்றி பல்வேறு மாவட்டங்களிலும் தொடர்ந்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், போராட்டக்காரர்களுக்கு எதிராக தடை உத்தரவைப் பெறும் நோக்கில் பொலிஸார் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

அதில், காற்றாலை செயற்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் இனி இடம் பெறாது என பொலிஸார் நீதி மன்றத்துக்கு உத்தரவாதம் அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து, தடுத்து வைக்கப்பட்டிருந்த காற்றாலைப் பாகங்களை மன்னார் நகருக்குள் அனுமதிக்கவும், காற்றாலை திட்டத்திற்கான கட்டுமானப் பணிகளை எதிர்வரும் 14 நாட்களுக்கு நிறுத்தி வைக்கவும் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## குற்றச் செயல்களில் ஈடுபட்ட 618 பேர் கைது

கொழும்பு, ஒக. 14

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் பொலிஸாரால் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 618 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் 24 ஆயிரத்து 708 பேர் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 19 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 203 சந்தேக நபர்கள் இந்த சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபானம் அருந்திய நிலையில் வாகனம் செலுத்திய 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், முறையற்ற விதத்தில் வாகனங்களை செலுத்திய 13 பேர் உட்பட போக்குவரத்து விதிகளை மீறிய 3 ஆயிரத்து 680 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## பாதையைக் கடக்க முற்பட்டவர் பேருந்து மோதியதில் உயிரிழப்பு

கொழும்பு, ஒக. 14

நொச்சியாகம பொலிஸ்பிரிவுக்குட்பட்ட நிகவெவ சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

புத்தளம் - திருகோணமலை பிரதான வீதியில் புத்தளத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த அதிசொகுசு பேருந்து ஒன்று துவிச்சக்கரவண்டியை தள்ளிக்கொண்டு பாதையை கடக்க முற்பட்டவர் மீது மோதியுள்ளது.

இதில் பலத்த காயமடைந்த அந்த நபர் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி மரணித்துள்ளார்.

உயிரிழந்த நபர் 54 வயதுடைய நொச்சியாகம, மொரவககந்த பகுதியைச்சேர்ந்தவர் ஆவார்.

சடலம் நொச்சியாக வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## மாவட்ட அபிவிருத்தித் திட்டத்துக்கு 200 கோடி ரூபாய் ஒதுக்க தீர்மானம்!

கொழும்பு, ஒக. 14

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய நாடு தழுவிய முயற்சியான மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்த, 2025 தேசிய வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து ரூ. 200 கோடி ரூபாயை ஒதுக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல், சேவை வழங்கலை மேம்படுத்துதல், வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் நிறுவன திறன்களை வலுப்படுத்துதல் ஆகியவற்றை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்ட வறுமை நிலைகளின் அடிப்படையில், பல பரிமாண வறுமை குறியீட்டைப் பயன்படுத்தி மாவட்டங்களுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்படும். நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இல் ஜனாதிபதி அவர்களால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும் மாவட்ட அளவில் பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் இந்த முயற்சி நோக்கம் கொண்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## இந்தியாவிலிருந்து கடலில் மிதந்து வரும் பிளாஸ்ரிக் கழிவுகளின் அளவு அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 14

பருவப்பெயர்ச்சி காற்றுடன் இந்தியாவிலிருந்து நாட்டின் சமுத்திர கட்டமைப்புக்குள் மிதந்து வரும் பிளாஸ்ரிக் உள்ளிட்ட கழிவுகளின் அளவு அதிகரித்துள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

மன்னார், யாழ்ப்பாணம், கற்பிட்டி, நீர்கொழும்பு ஆகிய கடற்பிராந்தியங்களில் அதிகளவான கழிவுகள் குவிந்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் சமந்த குணசேகர தெரிவித்தார்.

குறிப்பாக சென்னை, கேரளா, கொச்சின், கன்னியாகுமாரி ஆகிய பகுதிகளில் தயாரிக்கப்படும் போத்தல் வகைகள், வலைகள், பூங்கொத்துக்களுக்கு பயன்படுத்தப்படும் கயிறு போன்றவையே அதிகளவாக நாட்டின் கடற்பிராந்தியங்களில் தேங்கியுள்ளதாக அவர் கூறினார்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி செய்த ஒருவர் கைது!

கொழும்பு, ஒக. 14

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றின் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ருமேனியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக வாக்குறுதி அளித்து, நபர் ஒருவரிடமிருந்து 945,000 ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தகவலின்படி, நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள ஒரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் நடத்தப்பட்ட சோதனையின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும்!

## மட்டக்களப்பில் நேற்று ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு, ஓக. 14

வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும், முல்லைத்தீவில் இளைஞர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமையை கண்டித்தும் செம்மணி புதைகுழிக்கு நீதியான விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தியும் மட்டக்களப்பில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் வருகையை முன்னிட்டு மட்டக்களப்பு நகரத்தின் காந்தி பூங்கா முன்றலில் இந்தக் கவனவீர்ப்பு நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அழைப்பின் பேரில் நடந்த இந்தப் போராட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ஞா. சிறீநேசன், இ. சிறிநாத், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் சிவில் செயல்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவிலானோர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். (ஐ)

# சம்மாந்துறை பொலிஸ் நிலைய அரையாண்டு பரிசோதனை நிகழ்வு

கல்முனை, ஓக. 14

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் 2025 ஆண்டுக்கான அரையாண்டு மரியாதை - பரிசோதனை நிகழ்வு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே. டி. எஸ். ஜெயலத் தலைமையில் நேற்று முன்தினம் பொலிஸ் நிலைய உள்ளக மைதானத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டி. பி. எச். கலனசிறி பிரதம அதிதியாக கலந்து கொண்டு அணிவகுப்பை பார்வையிட்டு - மரியாதையையும் ஏற்றுக்கெண்டார்.

பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள், சுற்று சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறை உடைகள்,

விடுதிகள், பணிமனைகளையும் பார்வையிட்டதுடன், பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதித்தார்.

அத்துடன், பொலிஸாருக்கு வழிப்படுத்தல் வகுப்புகளையும் அவர் நடத்தினார். (ஐ-01)

# கிண்ணியா கடற்கரை பூங்காவில் கழிவறைகூடம் அமைக்க ரூ. 3 கோடி

திருகோணமலை, ஓக. 14

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் கிண்ணியாவில் கடற்கரை பொழுதுபோக்கு பூங்காவில்


கழிவறை கூடங்களை நிர்மாணிப்பதற்கான இடம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

கிண்ணியா கடற்கரை பொழுதுபோக்கு பூங்கா அதிகளவான சுற்றுலா பயணிகளை ஈர்க்கிறது. ஆனால், அடிப்படை வசதிகள் எதுவும் அங்கு இல்லை.

இந்த நிலையில், கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம். ஈ. எம். ராபியின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கு கழிவறை கூடங்களை அமைக்க 3 கோடி ரூபாயை சுற்றுலாத்துறை அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் கழிவறை கூடம் அமைப்பதற்கான இடம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# மட்டு. சிறைச்சாலையில் மருத்துவ முகாம் நடந்தது



மட்டக்களப்பு, ஓக. 14

தேசிய சிறைச்சாலைகள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம். முரளீஸ்வரனின் ஒழுங்குபடுத் துதலில் மட்டக்களப்பு சிறைச் சாலை உத்தியோகத்தர்களுக்கு மருத்துவ முகாம் நடத்தப்பட்ட து.

இதன்போது, என். சி. டி., ஈ. சி. ஜீ., கண், இரத்தப் பரிசோதனை என்பன நடத்தப்பட்டன.

மருத்துவர் உதயகுமார் தலைமையில் இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதன் போது நோயாளர் கட்டில் ஒன்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் அன்பளிப்பு செய்யப்பட்டது. (ஐ)

# மின்சாரம் தாக்கி முதியவர் மரணம்

மட்டக்களப்பு, ஓக. 14

சட்டவிரோதமாக மின் இணைப்பை வீட்டுக்கு பெற முயன்றவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - போரதீவுப்பற்று - தும்பங்கேணி கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

இதில், 70 வயதான தங்கராசா சுந்திராஜ் என்பவரே உயிரிழந்தார்.

மின்கம்பியில் சிக்கிக் கொண்டதால் மின்சார தாக்குண்ட அவரை அயலவர்கள் பழுகாமம் பிரதேச மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

எனினும், அவர் அங்கு உயிரிழந்தார்.

மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### ஏ. எல். மாணவர் தகுதி:

# முதல் பத்து இடங்களில் கிழக்கின் 5 வலயங்கள்

மட்டக்களப்பு, ஓக. 14

2024ஆம் ஆண்டு க. பொ. த. சாதாரண தர பரீட்சை முடிவுகளுக்கு அமைய முதல் தடவையில் அதிக மாணவர்கள் உயர்தரம் கற்க தகுதி பெற்றதில் கிழக்கு மாகாணம் முன்னிலை வகிக்கிறது.

தேசிய மட்டத்தில் முதல் 10 இடங்களில் கிழக்கின் 5 கல்வி வலயங்கள் இடம்பிடித்துள்ளன என்று பரீட்சை திணைக்களத் தரவு மூலம் தெரிய வந்துள்ளது.

இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தை மட்டக்களப்பு கல்வி வலயம், தொடர்ந்து 3ஆம் இடத்தை மட்டக்களப்பு மத்தி, 4ஆம் இடத்தை கல்முனை, 5ஆவது இடத்தை திருக்கோவில், 6ஆவது இடத்தை அக்கரைப்பற்று கல்வி வலயங்கள் பெற்றுள்ளன.

இதேநேரம், முதலிடத்தை கண்டி கல்வி வலயம் பெற்றுள்ள அதேவேளை, வடக்கு மாகாணத்தின் எந்தவொரு கல்வி வலயமும் முதல் 10 இடங்களுக்குள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சமஷ்டி தீர்வை வலியுறுத்தி சுங்கான்கேணியில் போராட்டம்



மட்டக்களப்பு, ஓக. 14

இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி தீர்வை வலியுறுத்திய போராட்டம் தொடர்ந்து 12 ஆவது நாளாக மட்டக்களப்பு - வாழைச்சேனை - சுங்கான்கேணியில் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் 100 நாள் செயல்முனைவு போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. தமிழ் மக்களின் இனப்பிரச்னை தொடர்பிலான விடயங்கள் கிராமங்களூடாக வெளிக்கொணரப்படும் நோக்கில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதன், ஓர் அம்சமாகவே சுங்கான்கேணியில் நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“இலங்கை அரசே இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை உறுதி செய்க”, “சமஷ்டியே தீர்வு”, “எங்கள் வளம்- எங்கள் உரிமை”, என்று எழுதப்பட்ட பதாகைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (ஐ)

# கல்முனை கடலோரத்தில் கல்அணை பணிகளை விரைவுபடுத்த உத்தரவு!

## பிரதி அமைச்சர் வசந்த நேரில் பார்வையிட்டு விடுத்தார்



கல்முனை, ஓக. 14

கடலரிப்பால் அழிவடையும் கல்முனையின் கடலோரத்தை பாதுகாக்க கல் அணை அமைக்கும் பணியை விரைவுபடுத்த சமூக வலுவூட்டல், கிராமிய அபிவிருத்தி பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ நடவடிக்கை எடுத்துள்ளார்.

கல்முனை முகைதீதன் ஜும்ஆ பெரியபள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் பிரதி அமைச்சர் கல்முனை கடற்கரையை நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

இதன்போதே மேற்கண்ட உத்தரவை கரையோரப் பாதுகாப்பு திணைக்கள பொறியியலாளருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டெட் ஹாண்ட்' நடவடிக்கையை அமெரிக்கா தூண்ட செய்கிறது

## ரஷ்யா எச்சரிக்கை

மொஸ்கோ, ஓக. 14

**அமெரிக்க ஜனாதிபதியின் கருத்துகள் டெட் ஹாண்ட் நடவடிக்கையை தூண்ட வழிவகுப்பதாக ரஷ்யா எச்சரித்துள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உக்ரைன் மீதான போரை நிறுத்த ரஷ்யாவுக்கு முதலில் 50 நாட்கள் காலக்கெடு விதித்தார். பின்னர், இதனை 12 நாட்களாக மாற்றினார்.

இது குறித்து, ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியும் அந்த நாட்டின் பாதுகாப்பு சபையின் உபதலைவருமான டிமிட்ரி மெட்வதேவ் எக்ஸ் தளத்தில், "ட்ரம்பின் ஒவ்வொரு காலக்கெடுவும் போரை நோக்கி தள்ளும் நடவடிக்கை", என்று பதிவிட்டார்.

இதையடுத்து, ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைதளத்தில், "டிமிட்ரி மெட்வதேவ் அத்துமீறி பேசி வருகிறார். எனவே, ரஷ்யா அருகே 2 அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்களை நிறுத்த உத்தரவிட்டுள்ளேன்" என பதிவிட்டிருந்தார்.

இதை அணு ஆயுதப் போருக்கான மிரட்டலாக கருதிய டிமிட்ரி மெட்வதேவ், 'அமெரிக்காவின் எந்த ஒரு பெரிய நடவடிக்கையும் டெட் ஹாண்ட் (Dead Hand) நடவடிக்கையை தூண்ட வழிவகுக்கும். அதன்பிறகு பின்வாங்க மாட்டோம்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### டெட்ஹாண்ட் என்றால் என்ன?

அமெரிக்கா, சோவியத் ரஷ்யா இடையே பனிப்போர் காலத்தில் அமெரிக்காவின் தாக்குதலில் தலைநகரமே அழிந்து ஜனாதிபதி, இராணுவத் தளபதி உள்ளிட்டோர் இறந்துவிட்டாலும் தானாக இயங்கி பதிலடி கொடுப்பதற்காக ரஷ்யா உருவாக்கியதே டெட் ஹாண்ட் திட்டம்.

இது 1980களில் உருவாக்கப்பட்ட சோவியத் ரஷ்யா காலத்து அணு ஆயுத கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு ஆகும். எதிரி நாடுகள் அணுகுண்டு வீசினால், அதனால் ஏற்படும் நில அதிர்வு, அணுக்கதிர்வீச்சு பற்றிய தகவல் அந்த அமைப்புக்கு கிடைக்கும். அதன் பிறகு தலைமை உத்தரவிட்டதும் தாக்குதல் நடத்திய நாட்டின் மீது தனது தாக்குதலை நடத்தும். பொதுவாக அணு ஆயுத தாக்குதலுக்கு உத்தரவிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே இருக்கும். இந்த நிலையில், எதிரி நாட்டின் அணுகுண்டு தாக்குதலில் ரஷ்யாவின் ஜனாதிபதி உட்பட முக்கிய தலைவர்கள் உயிரிழந்துவிட்டால், அங்கிருந்து உத்தரவு வராத நிலையில் அதைத் தானாக புரிந்துகொள்ளும். இதைத் தொடர்ந்து எவரின் கட்டளையுமின்றி தானாக தாக்குதலை நடத்தும்.

# காஸா மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்தியது இஸ்ரேல்!



ஜெருசலேம், ஓக. 14

காஸாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள பஞ்சத்தை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐரோப்பிய தலைவர்கள் வலியுறுத்தியுள்ள நிலையில் காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் மேலும் அதிகரித்துள்ளது.

காஸா நகரத்தின்மீது இஸ்ரேல் கடந்த 3 நாட்களாக வான் வழி தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளதாக ஹமாஸ் நடத்தும் சிவில் அமைப்பு கூறியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் மஹ்மூத் பஸ்ஸல் கூறுகையில், ஜெய்டவுன், சப்ராவின் குடியிருப்பு பகுதிகள் மூன்று நாட்களாக குண்டுகள் மற்றும் ட்ரோன் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளன. அவை பொதுமக்கள் வீடுகளுக்கு பெரும் அழிவை ஏற்படுத்துகின்றன. மேலும் குடியிருப்பாளர்களால் இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் மீட்க முடியவில்லை", என்று கூறியுள்ளார்.

2023 ஒக்ரோபர் 7 அன்று இஸ்ரேல் மீதான தாக்குதலில் 1,200இற்கும் மேற்பட்டவர்களை ஹமாஸ் அமைப்பு கொன்றது. அத்துடன், 251 பேரை பணயக்கைதிகளாகப் பிடித்தது.

இதைத் தொடர்ந்து, காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் போரில், இதுவரை 61,599 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கை நம்பகமானது என்று ஐ. நா. கருதுகிறது. (ஐ)

# உக்ரைன் நாட்டின் எல்லைகளை வலுக்கட்டாயமாக மாற்றக்கூடாது

## ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்து

பிரசெல்ஸ், ஓக. 14

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பும் அலாஸ்காவில் உக்ரைன் குறித்து ஓர் உச்சிமாநாட்டை நடத்தவுள்ள நிலையில் ஐரோப்பிய தலைவர்கள் உக்ரைன் எல்லைகளை வலுக்கட்டாயமாக மறுவரையறை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஓர் அறிக்கையில், "உக்ரைன் மக்கள் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்க சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும்" என்று ஐரோப்பிய தலைவர்கள் கூறியுள்ளனர்.

"பிராந்திய ஒருமைப்பாட்டு கொள்கைகளை மதிக்க வேண்டும், சர்வதேச எல்லைகளை வலுக்கட்டாயமாக மாற்றக் கூடாது" என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளின் தலைவர்களில் 26 பேர் கையெழுத்திட்டுள்ளனர். ஹங்கேரி தலைவர் விக்டர் ஓர்பன் ஒப்பமிடவில்லை. ஹங்கேரி, ரஷ்யாவுடன் நெருங்கிய நட்பை கொண்டுள்ளது. மேலும், உக்ரைனுக்கு ஐரோப்பிய ஒன்றிய ஆதரவைத் தடுக்கப் பலமுறை ஹங்கேரி முயன்றது என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

# இஸ்ரேல் தாக்குதல் 89 பேர் உயிரிழப்பு

காஸா, ஓக. 14

காஸாவில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய தாக்குதல்களில் உணவுக்காக காத்திருந்த 31 பேர் உட்பட 89 பேர் கொல்லப்பட்டனர். 513 பேர் காயமடைந்துள்ளனர்.

இது தவிர், பட்டினியால் இரு குழந்தைகள் உட்பட ஐவர் உயிரிழந்தனர் என்று காஸா சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் மூலம்103 குழந்தைகள் உட்பட பட்டினியால் இறந்தவர்களின் எண்ணிக்கை 227 ஆக உயர்ந்துள்ளது.

இதனிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை காசா மருத்துவமனை மீது நடந்த தாக்குதலில் 5 அல் ஜசீரா பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டமை சர்வதேச அளவில் இஸ்ரேலுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# இந்தியாவுக்கு மீண்டும் நாம் பாடம் கற்பிப்போம்

## பாகிஸ்தான் பிரதமர்

இஸ்லமாபாத், ஓக. 14

"சிந்து நதி நீரைத் தடுத்தால், இந்தியா ஒரு துளி தண்ணீர்கூட எடுக்க அனுமதிக்க மாட்டோம். இந்தியாவுக்கு மீண்டும் பாடம் கற்பிக்கப்படும்" - இவ்வாறு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் எச்சரித்துள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா இரத்துச் செய்வதாக அறிவித்தது. இதையடுத்து, இந்தியாவுக்கு எதிரான கருத்துகளை பாகிஸ்தான் வெளியிட்டு வருகிறது.

அமெரிக்கா சென்றிருந்த பாகிஸ்தான் இராணுவ தளபதி ஆசிம் முனீர், "சிந்து நதி குடும்ப சொத்து அல்ல. பாகிஸ்தானுக்கு வரும் தண்ணீரை தடுக்கும் வகையில் இந்தியா அணை கட்டினால் ஏவுகணைகள் மூலம் தகர்ப்போம்", என்றார்.

இதன்பின்னர், பாகிஸ்தானின் வெளிவிவகார முன்னாள் அமைச்சர் பிலாவல் பூட்டோ, "நரேந்திர மோடியின் தலைமையில் இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பாகிஸ்தானுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன. பிரதமர் மோடிக்கும் இந்த ஆக்கிரமிப்புகளுக்கும் எதிராக நாம் ஒன்றுபட்ட மக்களாக - ஒன்றாக நிற்க வேண்டியது அவசியம். மீண்டும் போர் ஏற்பட்டால் சிந்து நதி உள்பட 6 நதிகளையும் மீட்போம்" என்றார்.

இந்த நிலையில், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், "சிந்து நதி நீரைத் தடுத்தால், இந்தியா ஒரு துளி தண்ணீர்கூட எடுக்க அனுமதிக்க மாட்டோம். இந்தியாவுக்கு மீண்டும் பாடம் கற்பிக்கப்படும்" என்று கூறியுள்ளார்.

# வாஷிங்டனின் பொலிஸ் பிரிவு ட்ரம்பின் நேரடி கட்டுப்பாட்டில்

## எதிர்ப்புகள் வலுக்கின்றன

வாஷிங்டன், ஓக. 14

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வாஷிங்டனின் பொலிஸ் பிரிவை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார். அத்துடன், தலைநகரை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் தேசிய காவல் படையினரை ஈடுபடுத்தியுள் ளார்.

வாஷிங்டன் நகரின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தை மீறி ட்ரம்ப் இவ்வாறு செயல்படுவது குறித்து கடும் கண்டனங்கள் வெளியாகியுள்ளன.

வாஷிங்டனின் சட்ட ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நகரத்தை மீட்பதற்கு தனது நடவடிக்கைகள் அவசியம் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

எங்கள் தலைநகரத்தை நாங்கள் மீளப்பெறப்போகின்றோம் குடிசைகளை இல்லாமல் ஆக்குவோம். ஜனநாயகக் கட்சியின் தலைமைத்துவத்தின் கீழ் உள்ள ஏனைய நகரங்களையும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட் டின் கீழ் கொண்டுவருவேன் சிக்காக்கோவுக்கும் இது நடக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ட்ரம்பின் இந்த நடவடிக்கைக்கு எதிராக வெள்ளை மாளிகைக்கு வெளியே ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. ட்ரம்பின் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என வாஷிங்டன் நகர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ட்ரம்பின் கோல்ப் மைதானத்தால் வாழ்வாதாரம் இழக்கும் விவசாயிகள்!

ஹோசிமின், ஓக. 14

வியட்நாமில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குடும்பத்தின் மூலம் அமைக்கப்படவுள்ள கோல்ப் மைதானத்துக்காக 990 ஹெக்ரெயர் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்படுவது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இந்த மைதானத்தால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு சொற்ப பணம் மற்றும் சில மாதங்களுக்கான அரிசியும் நிவாரணமாக வழங்கப்பட்டு அவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்.

இந்த கோல்ப் மைதான திட்டத்துக்காக வியட்நாம் நிறுவனம் ஒன்று ட்ரம்பின் நிறுவனத்துக்கு 50 இலட்சம் டொலர் உரிம கட்டணம் செலுத்தி செயல்படவுள்ளது. ட்ரம்பின் இந்த ஒப்பந்தம் வியட்நாம், அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தத்தின் ஒரு பகுதி என்று ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது

இதேவேளை, நிலத்தை இழக்கும் விவசாயிக்கு ஒரு சதுர மீற்றருக்கு 12 முதல் 30 டொலர் (ரூ. 3600 - 9,000) வரையே இழப்பீடு வழங்கப்படுகிறது.

வியட்நாமில் நிலம் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால், இழப்பீடு குறித்து பேச்சு நடத்த விவசாயிகளுக்கு உரிமை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், 200 சதுரமீற்றர் நிலத்தை இழந்த விவசாயி ஒருவருக்கு 3 ஆயிரத்து 200 டொலரும் (சுமார் 9.6 இலட்சம் ரூபாய்) சில மாதங்களுக்கு போதுமான அரிசியும் இழப் பீடாக வழங்கப்பட்டுள்ளது. இது, வியட்நாமின் ஒரு வருட சராசரி சம்பளத்தையும் விடக் குறைவு என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் கிரிக்கெட் தொடர்:

# பாகிஸ்தானை 34 ஆண்டுகளுக்கு பின்னர் வீழ்த்தியது மே. இ. தீவுகள்!




அன்டிகுவா, ஒக. 14

34 வருடங்களுக்கு பின்னர் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை வென்று சாதித்துள்ளது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடியது. இதில், இருபது - 20 தொடரை 2-1 என பாகிஸ்தான் வென்றது. தொடர்ந்து இரு அணிகளும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடின.

இந்தத் தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வென்றது. இரண்டாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றது. தொடரின் வெற்றியாளரை தீர்மானிக்கும் மூன்றாவது போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி பந்துவீச முடிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 294 ஓட்டங்கள் எடுத்தது.

அணித் தலைவர் ஷாய் ஹோப் 94 பந்துகளில் 120 ஓட்டங்கள் எடுத்தார். லீவிஸ் 37, சேஸ் 36 மற்றும் கிரீவ்ஸ் 43 ஓட்டங்கள் எடுத்தனர்.

295 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பாகிஸ்தான் விரட்டியது. அந்த அணி 29.2 ஓவர்களில் 92 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.


சல்மான் ஆகா 30, முகமது நவாஸ் 23 ஓட்டங்கள் எடுத்தனர். பாபர் அஸாம் 9, அணித் தலைவர் முகமது ரிஸ் வான் உட்பட 5 வீரர்கள் ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தரப்பில் 7.2 ஓவர்கள் வீசி 18 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 6 விக்கெட்களை கைப்பற்றினார் ஜேடன் சீல்ஸ்.

202 ஓட்டங்களில் பாகிஸ்தான் படுதோல்வி அடைந்ததை அந்த நாட்டு கிரிக்கெட் ரசிகர்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். ஏனெனில் சுமார் 34 ஆண்டுகளுக்கு பிறகு மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தானை வென்றுள்ளது. கடைசியாக கடந்த 1991இல் பாகிஸ்தானை ஒருநாள் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீழ்த்தியிருந்தது. அதன் பிறகு இப்போதுதான் தொடரை வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ்: சிட்சிபாஸ் அதிர்ச்சி தோல்வி!




சின்சினாட்டி, ஒக. 14

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீரர் சிட்சிபாஸ் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் கிரெக்க வீரர் ஸ்டெபானஸ் சிட்சிபாஸ் - பிரான்ஸ் வீரர் பெஞ்சமின் போன்சியுடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் முதல் செற்றை சிட்சிபாஸ் கைப்பற்றினார். ஆனால், 2, 3ஆவது சுற்றுகளை பெஞ்சமின் கைப்பற்றி அசத்தினார். இதனால், பெஞ்சமின் போன்சி 6-7 (4-7), 6-3,6-4 என்ற செற் கணக்கில் வெற்றி 4-வது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

## சின்சினாட்டி ரென்னிஸ்: 4ஆவது சுற்றில் ரைபகினா




சின்சினாட்டி, ஒக. 14

சின்சினாட்டி ஓ்பின் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனை ரைபகினா போராடி 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ரைபகினா (கஜகஸ்தான்) - எலிஸ் மெர்டென்ஸ் (பெல்ஜியம்) மோதினர்.


இதில் முதல் செற்றை எலிஸ் மெர்டென்ஸ் கைப்பற்றிய நிலையில், 2, 3ஆவது செற்களை ரைபகினா கைப்பற்றினார். ரைபகினா இந்தப் போட்டியை 4-6, 6-3 மற்றும் 7-5 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றோர் ஆட்டத்தில் மேடிசன் கீஸ் (அமெரிக்கா), அயோய் இடோ (ஜப்பான்) ஆகியோர் மோதினர். இந்தப் போட்டியில் மேடிசன் 6-4, 6-0 என்ற கணக்கில் எளிதில் வெற்றி பெற்றார். இவர் 4ஆவது சுற்றில் மேடிசன் கீஸ் - ரைபகினா மோத உள்ளார்.

மற்ற ஆட்டங்களில் ஸ்வியாரெக் விளையாடமலே அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். ஸ்வியாடெக்குக்கு எதிராக விளையாடவிருந்த மார்டா கோஸ்ட்யுக் (உக்ரைன்) காயம் காரணமாக வெளியேறியதால் ஸ்வியாடெக் 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

பிரேவிஸ் அதிரடி சதம்:

# தென்னாபிரிக்காவிடம் வீழ்ந்தது அவுஸ்திரேலியா



டார்வின், ஒக. 14

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 53 ஓட்டங்களில் வெற்றி பெற்றது. தென்னாபிரிக்காவின் இளம் வீரர் டெவால்ட் பிரேவிஸ் அதிரடிச் சதம் விளாசி தனது அணியின் வெற்றிக்கு உதவினார்.

தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் 3 இருபது - 20 மற்றும் 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இரு அணிகளும் விளையாடுகின்றன. கடந்த 10ஆம் திகதி தொடங்கிய இருபது - 20 தொடரின் முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. இந்நிலையில், இந்த தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பந்து வீச முடிவு செய்தது. தென்னாபிரிக்க அணி 6.5 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 57 ஓட்டங்கள் எடுத்தது தடுமாறியது.

ஸ்டப்ஸூடன் இணைந்து அவுஸ்திரேலிய பந்து வீச்சை துவம்சம் செய்தார் டெவால்ட் பிரேவிஸ். ஸ்டப்ஸ் 22 பந்துகளில் 31 ஓட்டங் கள் எடுத்தார். மறு முனையில் ஆடிய டெவால்ட் பிரேவிஸ், 56 பந்துகளில் 125 ஓட் டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார். தனது இன்னிங்ஸில் 12 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர் களை டெவால்ட் பிரேவிஸ் விளாசியிருந்தார்.

20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 218 ஓட் டங்கள் எடுத்தது தென்னாபிரிக்கா அணி. அவுஸ்திரேலியா தரப்பில் பந்து வீசிய ஹசில்வூட், மக்ஸ்வெல், ஸாம்பா, அபொட் ஆகியோர் தலா 4 ஓவர்கள் வீசி 40 ஓட்டங்களுக்கு மேல் கொடுத்திருந்தனர்.

219 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை அவுஸ்திரேலிய அணி விரட்டியது. அந்த அணி சார்பில் ரிம் டேவிட் 24 பந்துகளில் 50 ஓட்டங்கள் விளாசினார்.

அணித் தலைவர் மார்ஷ் 22, மக்ஸ்வெல் 16, அலெக்ஸ் கேரி 26 ஓட்டங்கள் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

17.4 ஓவர்களில் 165 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது ஆஸி. இதன் மூலம் 53 ஓட்டங்களால் வெற்றி பெற்றது தென்னாபிரிக்கா. தற்போது இந்த தொடர் 1-1 என சமநிலையிலுள்ளது.

ஆட்ட நாயகன் விருதை டெவால்ட் பிரேவிஸ் வென்றார். தென்னாபிரிக்காவின் மஃபாகா, கார்பின் போஷ் தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த காலத்தை....

மீட்டெடுத்தல் மற்றும் பாகுபாடு மற்றும் பிளவுபடுத்தும் அரசியலை ஒழித்தல் உள்ளிட்ட நீண்டகால பிரச்னைகளில் இருந்து ஒரு புதிய திசையில் முன்னேறுவதற்கு தலைமை உறுதியளிப்பதன் மூலம், இலங்கை கடந்த காலத்திருந்து விடுபடுவதற்கான ஒரு வாய்ப்பு உருவாகிறது. இந்த உறுதிமொழிகளை விளைவுகளாக மாற்ற ஒரு விரிவான செயல்திட்டம் இப்போது தேவைப்படுகிறது.

“இந்தச் செயல்முறை, உள்நாட்டுப் போரின்போது நடத்தப்பட்ட மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் குற்றங்கள், அரசு மற்றும் படையினர், இதேபோல் தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற அரசு சாரா ஆயுதக் குழுக்களின் பொறுப்பு ஆகியவற்றுடன், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகங்கள்மீது இந்த வன்முறையால் நீடிக்கும் தாக்கம் ஆகியவற்றுக்கான தெளிவான மற்றும் முறையான அங்கீகாரத்துடன் தொடங்கப்பட வேண்டும். நான் இலங்கைக்குச் சென்றபோது நேரில் கண்டது போல, பாதிக்கப்பட்டவர்களின் வேதனையும் துயரமும் இன்னும் தீவிரமாக உள்ளன. எனவே, உண்மை மற்றும் நீதிக்கான அவர்களின் கோரிக்கைகள் முழுமையாக கவனிக்கப்பட வேண்டும்.” என்றும் கூறுகிறது.

அத்துடன், அரசின் “தேசிய ஒற்றுமை“ எனும் தொலைநோக்குப் பார்வையை நடைமுறைப்படுத்துவதற்கும், முக்கியமாக கடந்த கால மீறல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் இந்த முயற்சிகள் மிக அவசியம். பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகளை முன்னேற்றுவதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை இதன்போது ஆணையாளர் டர்க் மீண்டும் வலியுறுத்தினார்.

ஒரு சுதந்திரமான பொது வழக்கறிஞர் பணிமனையை நிறுவும் அரசாங்கத்தின் முயற்சியை வரவேற்கும் இந்த அறிக்கை, கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க ஒரு சுயாதீனமான சிறப்பு வழக்கறிஞர் உட்பட ஒரு பிரத்தியேக நீதித்துறை பொறிமுறையை நிறுவ பரிந்துரைக்கிறது. வடக்கு, கிழக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட நிலங்களை விடுவித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்தல் மற்றும் நீண்டகாலமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டவர்களை, அதிலும் சிலர் பல தசாப்தங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை விடுவித்தல், ஆகியவற்றுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும் சர்வதேச அளவிலும் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கு பங்களிப்பு வழங்குமாறு சர்வதேச சமூகத்தை இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

“சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடுப்பதும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதும் இலங்கை அரசாங்கத்தின் முதன்மை பொறுப்பாக இருப்பினும், இதை சர்வதேச வழிமுறைகள் மூலம் பூர்த்தி செய்து ஆதரிக்கவும் முடியும்” என அறிக்கை கூறுவதுடன், குறிப்பாக பொறுப்புக்கூறல் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கும் நல்லிணக்க முயற்சிகளில் பங்களிப்பதற்கும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் வலுப்படுத்தப்பட்ட திறனைப் பயன்படுத்துமாறும் உறுப்பு நாடுகளை வலியுறுத்துகிறது.

“நினைவேந்தலுக்கும் விவாதிப்பதற்கும் அரசாங்கம் இடமளித்துள்ளபோதிலும் குறிப்பாக, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான பொறுப்புக்கூறல் போன்ற விடயத்திலும் நில அபகரிப்பு, சுற்றுச்சூழல் பிரச்னைகள் தொடர்பிலும் பணிகளில் ஈடுபடும் சிவில் சமூக செயல்பாட்டாளர்களை குறிவைத்து தொடர்ந்து வரும் மிரட்டல், துன்புறுத்தல்கள் பற்றியும், காணாமல்ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மீதான கண்காணிப்பு அச்சுறுத்தல் போன்றவற்றையும் இந்த அறிக்கை விளக்குகிறது.”

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வதற்கான உறுதிமொழிகள் இருந்தபோதிலும் புதிய அரசாங்கம் மக்களைக் கைது செய்து தடுத்து வைக்க இந்தச் சட்டத்தைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறது. தொடர்ந்து நடைபெறும் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்கள், சித்திரவதைகள் மற்றும் தடுப்பு காவலில் இடம்பெறும் மரணங்கள் ஆகியவற்றை இந்த அறிக்கை விபரிக்கிறது.

மேலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பயன்பாட்டுக்கு உடனடித் தடை விதிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறது. கருத்து மற்றும் வெளிப்பாட்டு சுதந்திரம், சங்கம் அமைத்தல், அமைதியான கூட்டம் போன்ற அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்தும் பிற சட்டங்கள் அல்லது முன்மொழியப்பட்ட சட்டங்களை திருத்த அல்லது ரத்து செய்யவும் இது அழைப்பு விடுக்கிறது. இணைய பாதுகாப்புச் சட்டம், ஐ. சி. சி. பி. ஆர். சட்டம், என். ஜி. ஓ. சட்ட வரைவு மற்றும் தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம் எண்.9 இன் வரைவு உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்துகிற சட்டங்களும் இதில் அடங்கும்.

இந்த அறிக்கை, அனைத்து இலங்கையர்களிலும் தாக்கத்தை ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடி மற்றும் தற்போதைய கடன் சுமையின் கடுமையான தாக்கங்களை, குறிப்பாக ஏழ்மையானவர்கள் மற்றும் மலையக தமிழ் சமூகம் உட்பட, குறிப்பாக ஏழ்மையில் உள்ளவர்கள் மற்றும் பிற பாதிக்கப்படக்கூடிய நிலைகளில் உள்ளோரையும் பற்றி ஆய்வு செய்கிறது.

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை உணர்ந்து கொள்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை அரசாங்கத்துக்கு வழங்கவும், சிக்கன நடவடிக்கைகள் நாட்டின் மனித உரிமைகள் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுவதற்கான திறனைக் குறைமதிப்புக்கு உட்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்யவும், அனைத்து சர்வதேச நிதி நிறுவனங்களையும்யும் வெளிநாட்டு கடனுதவியாளர்களையும் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## கபில்ராஜின்...

வீதியிலுள்ள முகாமிலுள்ள படையினர் ஓகஸ்ட் 7ஆம் திகதி இரவு முகாமுக்குள் நிலர் நுழைவதைத் தடுத்து நிறுத்தினர். அவர்களில் ஒருவரை படையினர் கைது செய்தனர். ஏனையவர்கள் தப்பியோடிவிட்டனர். நாங்கள் அவர்களை துரத்திச் செல்லவில்லை.

இராணுவத் தலைமையகத்தின் உத்தரவின்பேரில் குறிப்பிட்ட இராணுவ முகாமை சேர்ந்தவர்கள் பொலிஸாருக்கு உரிய ஒத்துழைப்பை வழங்கினார்கள். மூன்று படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும், எவரும் கபில்ராஜின் உடல் மீட்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்படவில்லை.

சிங்க படையணியின் 12ஆவது பட்டாலியனின் முகாம் அது. கடந்த 7ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டவரை அவரின் பெற்றோரிடம் ஒப்படைத்து விட்டோம். பல உள்நோக்கம் கொண்ட சக்திகள் இந்த விடயத்தை பயன்படுத்த முயல்கின்றன. ஆனால் அந்த பகுதியில் வசிக்கும் மக்கள் அந்த முகாமை சேர்ந்தவர்களுடன் சிறந்த உறவை பேணுகின்றனர் - என்றார்.

மேலும், இராணுவ முகாமின் பொருட்களை எடுத்துச் செல்ல இராணுவத்தினரால் அழைக்கப்பட்டு, அவர்கள் தாக்கப்பட்டனர் என்ற சம்பவத்தையும் இராணுவப் பேச்சாளர் மறுத்துள்ளார். (ஐ)

## பிள்ளையானின்....

அவரின் இல்லத்தில் வைத்து சி. ஐ. டியினர் கைது செய்தனர் என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்படு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஏற்கனவே பிள்ளையான் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். சி. ஐ. டியினர் அவரை கடந்த ஏப்ரல் 7ஆம் திகதி கைது செய்திருந்தனர்.

அவரின் கைதைத் தொடர்ந்து அவருக்கு நெருக்கமான பலர் கைதாகி வருகின்றனர். இந்த நிலையிலேயே முஹமட் ஷாகித் நேற்று கைது செய்யப்பட்டார்.

இதேசமயம், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கடந்த ஆண்டு ஜூன் 17ஆம் திகதி காத்தான்குடியில் தனியாக இருந்த பெண்ணின் தங்க ஆபரணங்களை கொள்ளையிட முயன்றுள்ளார். அப்போது, தனது கைத்துப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கி சுட்டுவிட்டு தப்பிச் சென்றிருந்தார் என்றும் கூறப்படுகிறது. மேலும், அவர் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டது

## எதிர்க்கட்சிகள்...

கலந்துரையாடல் ஒன்று நடை பெற்றிருந்தது. இதன் தொடர்ச்சியாகவே இன்றைய தினமும் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

அரசாங்கத்துக்கு நேரடியாக சவால் விடும் இந்தக் கூட்டணியை உருவாக்க இந்தக் கலந்துரையாடல் பயன்படாது. எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமையை உருவாக்குவது மட்டுமே இதன் நோக்கம் - என்றும் அரசியல் பிரதிநிதிகள் கூறியுள்ளனர். (ஐ)

## செம்மணி...

ரணிலின் விசுவாசியான சுமந்திரன் ஆகியோரின் தாளத்துக்கேற்ப ஆடுவதற்கு எமது மக்கள் கொண்டைகட்டிய சீனர்கள் அல்லர்”, என்றும் அவர் கூறியுள்ளார்.

பளை மத்திய கல்லூரியில் பச்சிலைப் பள்ளியை சேர்ந்த 300 பேருக்கு காணி உரிமைப் பத்திரம் வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை வடக்கில் இருந்தே ஆரம்பித்துள்ளோம். வடக்கு மக்களின் வாழ்வில் என்றைக்கு வசந்தம் துளிர்விடுகிறதோ அன்றுதான் எமது வாழ்விலும் வசந்தம் ஏற்படும். ஏனெனில், இது மக்களுக்கான அரசாங்கமாகும்.

சுமந்திரனுக்கு ரணிலுடன் இருக்கும் போது நல்லது. யாழ். நூலகத்தை எரித்த பாவிகளின் பைல்களை தூக்கிக் கொண்டு திரியும்போது தமிழ் மக்களின் பிரச்னை அவருக்கு தெரியவரவில்லை. ஆனால், இன்று அவர் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கின்றார். மட்டக்களப்பில் 10, 15 பேரை அழைத்து சாணக்கியன் இன்று (நேற்று) ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார். அவர் நாமல் ராஜபக்ஷவின் நீலப்படையணியில் இருந்தவராவார்.

கடந்தகால கொலைகள் தொடர்பில் கண்டறியப்பட வேண்டும். அதனால்தான் செம்மணி புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணி மற்றும் விசாரணைக்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

“மன்னாரில் காற்றாலை மின்திட்டம் தொடர்பில் பிரச்னை எழுந்துள்ளது. அங்குள்ள கனிய மணல் அகழ்வு இடம்பெறுகின்றதாம். இதனால் மக்களின் காணிகள் சூறையாடப்படப்போகின்றதாம்’ என ரிஷாத் பதியுதீன் கூறுகிறார்.

காற்றாலை மின் உற்பத்திக்கு கடந்த காலங்களில் இந்த பாவிகள்தான் காணி வழங்கினார்கள். அதற்குரிய அனுமதியையும் இந்தப் பாவிகளே வழங்கினர். கனிய மணல் அகழ்வுக்கும் ராஜபக்ஷ, ரணில் ஆட்சியில் அமைச்சராக இருந்த பாவிகள்தான் அனுமதி வழங்கினர் - என்றும் கூறினார். (ஐ)

## சிலர் உயிருடன்...

“சிலர் உயிருடன் புதைக்கப்பட்டிருக்கலாம் என கருதுகின்றோம். ஏற்கனவே, இறந்தநிலையில் அவர்கள் புதைக்கப்பட்டிருந்தால் அவர்களின் உடல்கள் வளையாது. சிலரின் கை, கால்கள் முறுக்கப்பட்டிருந்தன. ”, என்றும் கூறினார்.

இப்போதைய அரசாங்கத்தை நம்ப முடியாது என்பதை வரலாறு எங்களுக்குக் காட்டுகிறது. அவர்கள் சர்வதேச கண்காணிப்பை எதிர்ப்பார்கள். அரசாங்கத்துக்கு இனப்பிரச்னை குறித்த புரிதல் இல்லை - அவர்கள் அதனை புரிந்து கொள்ளவில்லை. ஊழலை ஒழித்தால் நாடு அமைதியாக இருக்கும் என அவர்கள் கருதுகின்றனர். ஆனால், நாடு கடனில் சிக்கியமைக்கு இனப்பிரச்னையும் ஒரு காரணம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)

## அரியாலை...

முக்கியத்துவம் பெறுகிறது. மேலும், கடந்த 4ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனை தொடர்பான அறிக்கையும் இன்றைய தினம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அரியாலை மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்டமாக தொடர்ந்த அகழ்வில் இதுவரை 147 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில், 133 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், 3ஆம் கட்ட அகழ்வு பணிகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திங்களன்று...

கோரிக்கையை விடுத்தார்.

மேலும், மக்கள் மத்தியில் இராணுவ முகாம்கள் அமைந்திருப்பதாலேயே முல்லைத்தீவு சம்பவம் போன்று பல தாக்குதல்கள் நடைபெறுகின்றன. இதை அடிப்படையாகக் கொண்டு வடக்கு, கிழக்கில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டே ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

சிலருக்கு அசௌரியங்கள் இருக்கலாம். ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நமது ஒற்றுமையை எடுத்துக் காட்டும் விதமாக இந்தக் ஹர்த்தால் அமைய வேண்டும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில்கூட இராணுவம் பெரிய முகாம்களுக்கு திரும்ப வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. ஆனால், அது இதுவரை நிகழவில்லை. அதிலும் மோசமான விசாலிப்புகளே நடைபெறுகின்றன.

எனவே, எதிர்வரும் 18ஆம் திகதி - திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியுடன் நிறைவுபெறும் இந்தக் கடையடைப்பு போராட்டத்துக்கு மக்கள் அனைவரும் ஆதரவு தர வேண்டும் - என்றார். (ஐ)

## மடு அன்னையின்...

திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இதேசமயம், மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான ஆயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில், மன்னார் மறை மாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பங்குபற்றுதலுடன் மடு திருத்தல மண்டபத்தில் நடைபெற்றது.

திருவிழா நிறைவுநாளில் வருடாந்தம் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பது வழக்கம். அங்குகூடும் பக்தர்களின் நலன்கருதி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. இந்தக் கூட்டத்தில் சகல திணைக்களங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மன்னார் காற்றாலை செயல்திட்ட கட்டுமானப் பணிகளுக்கு தடை!

மன்னார், ஓக. 14

**அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மன்னார் காற்றாலை செயற்திட்டத்திற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், அந்த திட்டத்துக்கான கட்டுமானப் பணிகளை எதிர்வரும் 14 நாட்களுக்கு தடை விதித்து மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

மன்னார் மாவட்டத்தில் நடைபெற்று வரும் காற்றாலை இரண்டாம் கட்டத் திட்டத்துக்கு எதிராக, மன்னார் மாவட்டம் மாத்திரமன்றி பல்வேறு மாவட் டங்களிலும் தொடர்ந்து போராட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், போராட்டக்காரர்களுக்கு எதிராக தடை உத்தரவைப் பெறும் நோக்கில் பொலிஸார் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். அதில், காற்றாலை செயற்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் இனி இடம்பெறாது என பொலிஸார் நீதிமன் றத்துக்கு உத்தரவாதம் அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து, தடுத்து வைக்கப்பட்டிருந்த காற்றாலைப் பாகங்களை மன்னார் நகருக்குள் அனும திக்கவும், காற்றாலை திட்டத்திற்கான கட்டுமானப் பணிகளை எதிர்வரும் 14 நாட்களுக்கு நிறுத்தி வைக்க வும் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது. (அ)

## சுரங்க அனுமதிப்பத்திரங்களை ஒன்லைனில் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஓக. 14

அனைத்து வகையான சுரங்க அனுமதிப்பத்திரங்களையும் ஒன்லைன் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் காலத்தில் அனைத்து சுரங்க அனுமதிப் பத்திரங்களையும் ஒன்லைன் ஊடாக மாத்திரமே பெற்றுக்கொள்ள வேண்டும் என புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

சுரங்கப் பணிகள் முன்னெடுக்கப்படும் இடங்களை வரைபடமாக்கி தரவுத்தளம் தயாரிக்கப்படவுள்ளது.

இதனூடாக அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளப்படும் அகழ்வுகளும் அனுமதிப்பத்திரத்துடன் இடம்பெறுகிறதா என்பது தொடர்பில் எந்நேரத்திலும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பிருப்பதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## ரயில்வே பொதுமுகாமையாளராக ரவீந்திர பத்மப்பிரிய நியமனம்

கொழும்பு, ஓக. 14

இலங்கை நிர்வாக சேவையில் விசேட தரத்தைக் கொண்ட கே.ரவீந்திர பத்மப்பிரிய ரயில்வே பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுக, சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கு அமைய இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் தகவல் தொழில்நுட்பத்துறையின் பணிப்பாளராக அவர் இதற்கு முன்னர் கடமையாற்றியிருந்தார். (அ)

## நீதித்துறை அதிகாரிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களை சோதனையிடுவதற்கு அனுமதி

கொழும்பு, ஓக. 14

ஒவ்வொரு காலாண்டுக்கும் ஒரு தடவை நீதித்துறை அதிகாரிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களை சோதனையிடுவதற்கு தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் ஊடாக மேல் நீதிமன்ற வளாகங்களில் சோதனைகளை மேற்கொள்ள இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ இல்லங்கள் முறையாக பராமரிக்கப்படுவதில்லை என கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் பிரசன்ன அல்விஸ் வெளியிட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறையாக துப்பரவு செய்யப்படாமையால் நுளம்பு பெருக்கம் அதிகரித்துள்ளமை தொடர்பிலும் தகவல் வெளியாகியுள்ளது.

உத்தியோகபூர்வ இல்லங்களை முறையாக பராமரிப்பது அதிகாரிகளின் கடமையென நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் பிரசன்ன அல்விஸ் தெரிவித்துள்ளார். (அ)

## வெளிநாட்டவர் இலங்கையில் கஞ்சா பயிரிடுவதற்கு அனுமதி

கொழும்பு, ஓக. 14

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன், அரசாங்கம் முதல் முறையாக, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கடுமையான நிபந்தனைகளின் கீழ் ஒரு புதிய முதலீட்டு வாய்ப்பாக சட்டபூர்வமாக கஞ்சா பயிரிட அனுமதித்துள்ளது.

இந்தத் திட்டம் இலங்கை முதலீட்டுச் சபையால் மேற்பார்வையிடப்படுகிறது. மேலும் இதன் முதன்மை நோக்கம் மருந்து உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காகப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் கஞ்சா சார்ந்த பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம், நாட்டுக்கு குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணியை ஈட்டுவதாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 37 விண்ணப்பங்களில், தகுதிவாய்ந்த 7 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு 6 மாத காலத்திற்கான தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் அவர்களின் திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்து எதிர்காலத்தில் பயிர்ச்செய்கை காலம் நீட்டிக்கப்படும். இந்தத் திட்டத்தைத் தொடங்க, ஒரு முதலீட்டாளர் குறைந்தபட்சம் 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆரம்ப முதலீடாகச் செய்ய வேண்டும்.

மேலும் இலங்கை மத்திய வங்கியில் 2 மில்லியன் அமெரிக்க டொலர் பத்திரத்தை வைப்பு செய்வது கட்டாயமாகும். இந்தத் தகவலை ஆயுர்வேதத் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் நாயகம் டாக்டர் தம்மிக்க அபேகுணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தப் பயிர்ச் செய்கைக்காக மீரிகம பகுதியில் 64 ஏக்கர் பரப்பளவு ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்படி கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் இந்தப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன்படி, பயிர்செய்கை செய்யப்பட்ட நிலத்தைச் சுற்றி வலுவான பாதுகாப்பு வேலி அமைப்பதோடு மட்டுமல்லாமல், விசேட அதிரடிப்படை மற்றும் இலங்கை பொலிஸாரிடமிருந்து பாதுகாப்பைப் பெறுவதும் கட்டாயமாகும்.

இந்தத் திட்டத்தின் மூலம் வளர்க்கப்படும் கஞ்சா இலங்கையில் பயன்படுத்தப்படாமல் முழுவதுமாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். மேலும் கஞ்சா செடியின் எந்தப் பகுதியையும் (விதைகள், இலைகள், வேர்கள்) வெளிப்புறச் சூழலுக்கு வெளியிடாமல் அழிக்க சட்டங்களும் விதிமுறைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இலங்கை முதலீட்டுச் சபை, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் ஆயுர்வேதத் துறை உள்ளிட்ட பல அரச நிறுவனங்கள் இந்தத் திட்டத்தை மேற்பார்வையிட இணைந்து செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெளிநாட்டுக் கடன் சீரமைப்பில் 90 வீதத்துக்கும் மேல் நிறைவடைவு

கொழும்பு, ஓக. 14

ஜூலை மாத நிலவரப்படி இலங்கை அதன் வெளிப்புற கடன் மறுசீரமைப்பில் 90 வீதத்துக்கும் மேற்பட்டவற்றை முழுமையாக நிறைவு செய்துள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கை அதன் 98% க்கும் அதிகமான வெளிப்புற கடன் வழங்குநர்களுடன் கடன் உடன்பாட்டை எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மறுசீரமைப்பு இருதரப்பு மற்றும் வணிகக் கடன் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.

இதில் சீன எக்ஸிம் வங்கி, சவுதி அரேபியா மற்றும் சீன அபிவிருத்தி வங்கியுடன் நிறைவுசெய்யப்பட்ட ஒப்பந்தங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், 17 நாடுகளை உள்ளடக்கிய உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடனான ஒப்பந்தங்கள் ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஹங்கேரியுடன் கையெழுத்திடப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் குவைத் மற்றும் சிறிய கடன் வழங்குநர்கள் போன்ற பிற இருதரப்பு கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகள் இறுதி கட்டத்தில் உள்ளன.

வணிக கடனில், அரசாங்கம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 10.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சர்வதேச இறையாண்மை பத்திர பரிமாற்றத்தை நிறைவு செய்தது, இதில் 98% பத்திரதாரர்கள் பங்கேற்றனர்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் பத்திரதாரர்கள் மற்றும் பிற சிறு வணிக கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையில், கடன் மறுசீரமைப்பு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைத்தன்மை இலக்குகளை அடைந்து வருவதாகவும் கடனை நிலையான பாதையில் கொண்டு செல்கிறது எனவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# தனுஷ்கோடிக்கு படகு மூலம் சென்று அடைக்கலம் பெற்ற இலங்கை பெண்

சென்னை, ஓக. 14

இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவர் தனியாக இந்தியாவின் தனுஷ்கோடிக்குப் படகு மூலம் சென்று அடைக்கலம் பெற்றுள்ளதாகத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

இதனையடுத்து, அவர் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டார். மன்னார் மாவட்டம் ஆண்டன்குளம் பகுதியைச் சேர்ந்த 25 வயதான விதுர்சியா என்பவரே தனியாக இந்தியாவுக்குச்சென்றுள்ளார்.

முன்னதாக அவர் திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தனது குடும்பத்துடன் இலங்கை ஏதிலியாக வசித்து வந்தார்.

எனினும், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம், அவர் வானூர்தி மூலம் இலங்கைக்குத் திரும்பினார்.

எனினும், இலங்கையில் தம்மால் வாழ்க்கையை நடத்த முடியவில்லை என்பதால், மீண்டும் நேற்று முன்தினம் அதிகாலை 1 மணிக்கு மன்னார் கடற்கரையிலிருந்து சட்டவிரோதமாக ஒரு கண்ணாடியிழை படகில் ஏறி, அதிகாலை 3 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல் முனை கடற்கரையில் இறங்கியுள்ளார்.

இந்தநிலையில், இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, 2022 மார்ச் முதல் தமிழகத்திற்கு வந்த இலங்கையிலிருந்து ஏதிலிகளின் எண்ணிக்கை 321 ஆக உயர்ந்துள்ளது. (அ)

## இலங்கை - இந்திய கடற்படைகளின் கடல்சார் பயிற்சி நடவடிக்கை இன்று

கொழும்பு, ஓக. 14

இலங்கை - இந்திய கடற்படைகளுக்கு இடையிலான வருடாந்த இருதரப்பு கடல்சார் பயிற்சி நடவடிக்கை இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ளன.

இதற்காக இலங்கை - இந்திய கடற்படைகளின் விசேட கப்பல்கள் பயன்படுத்தப்படவுள்ளதுடன், 12 உலங்கு வானூர்திகளும் பயன்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible]றைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org